
ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST-INDIA

பதிவு எண் 2041

மகாத்மா காந்தி வாழ்க

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா




வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா „ ... ரூ 1–12
வெளி நாட்டிற்கு „ ... ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 8.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
தனி வீத்தமும் உண்டு.

| | | |
|---|---|---|
| மாலை 3 | ஈரோடு, பிரபவ ஞு அற்பிசி மீ 14 உ (30—10—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 27 |


## THE

# கும்பகோணம் இண்டஸ்ட்ரியல் கம்பெனி Ltd.

ரைஸ்மில்கள், ஆயில் இஞ்சின்கள், மோட்டார் இஞ்சின்கள் முதலிய இயந்திரங்களுக்கு வேண்டிய சாமான்கள், பேரிங்குகள் முதலானவைகள் இரும்பு, பித்தளை, கன்மெடல், தண்டவாளம், ஒயிட்மெடல் முதலிய லோகங்களில் வார்த்தும், கடைந்தும் ரிப்பேர் செய்தும் கரும்பாலை, ரைஸ்மில் சிலிண்டர், காப்பிங் பிரஸ் முதலிய சாமான்கள் புதியதாகச் செய்தும் கொடுக்கப்படும்.

ஆர்டர்கள் குறித்த காலத்தில் குறைந்த சார்ஜுக்கு செய்து கொடுக்கப்படும்.

P. கோவிந்த பிள்ளை மானேஜிங் டைரெக்டர்.
கும்பகோணம் இண்டஸ்டிரியல் கம்பெனி லிமிடெட், பெரிய தெருவு, கும்பகோணம்.

## நமது கடன்.

(லாலா லஜபதிராய் எழுதுவது.)

புதியன புகுதலால் சமுதாய வாழ்க்கை மாறுதல்களை யடைவது இன்றியமையாததேயாகும். காலத்தின் வழியும், புதிய கருத்துகளுக்கேற்பவும் பழைய கொள்கைகளை மாற்றிப் புதியவற்றை யேற்றவாறு திருத்தியமைத்துக்கொள்ளுதலே வாழ்வின் சக்தியாகும். எனவே இவ்வாறு வேண்டுங்காலத்து மாறுதல்களைக் கைக்கொண்டும், புதிய நிலைமைகளுக்கேற்றவாறு கொள்கைகளைத் திருத்தியமைத்துக்கொள்ளும் ஆற்றலை யுடைத்தாயும் இல்லாத ஒரு சமூகம் விரைவில் இறந்தொழியும் என்பது போதரும். நான் சரித்திர வாலாறுகளையுஞ் சாத்திரங்களையும் படித்தவளவிலிருந்து என் கருத்துக்குப் படுவதென்னவென்றால், இந்து மதத்தின் பெருமை தங்கிய அடிப்படையான நற்கொள்கைகளில் மிகவுந்தலை சிறந்து விளங்குவது காலத்திற்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு அதன் கொள்கைகளைத் திருத்தியமைத்துக்கொள்ள முற்படுவதேயாகும். இந்து சாத்திரங்களையும், சூத்திரங்களையும், ஸ்மிருதிகளையும் ஒருங்கே ஒப்பிட்டுப் படிப்பார்க்கு இந்து சமூகமும் அதனுடைய ஆசாரத்திட்டங்களும் எவ்வாறு திருத்தியமைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது நன்கு புலனாகும். வேதங்கள் மொழியப்பட்ட காலத்திருந்த சமூகம் தனக்கிசைந்தவாறு சமூக ஒழுக்க திட்டங்களை ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் வழியிறங்கி வந்தன வென்பது வெளிப்படை. ஆகவே, அச்சமூகத்திற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்குப்பின் தோன்றியவர்களும் அத்திட்டங்களையும், பழக்கங்களையுமாதரித்து வருதலென்பது முடியாதென்பது ஒப்பமுடிந்த உண்மையாகும். ஏனெனில் அவர்களது மாறுபட்ட நிலைமை ஒரு மாறுதலை, சிற்சில சமயங்களில் வேத காலத்திலேற்பட்ட திட்டங்களுக்கு நேர் எதிரிடையான மாறுதலைக் கைக்கொள்வது தடுக்கொணாததாகும். ஒவ்வொரு தலைமுறையும் ஒவ்வொருவித மாறுபட்ட நோக்கத்தை யுடைத்தாயிருப்பதியற்கை. ஆகவே இவ்வாறு சில தலைமுறைகள் கழிந்தவுடன் அவ்வப்போது மாறுபட்ட கொள்கைகளும், நோக்கங்களும் ஒன்று சேர்ந்து அவைகளுக்கேற்றவாறு சட்ட திட்டங்களையும் கோட்பாடுகளையு மாற்றிக் கொள்ளுதலும் இயற்கையே.

### வேத காலத்தில் "ஜாதி"

வேத காலத்தில் 'சாதி' யென்பதொன்றில்லை யெனவே கூறலாம். கோவில் வழிபாடும் கிடையாது. அக்காலத்திருந்த ஆரிய சமூகத்தாருக்கும் அவர்களுக்குத் தோன்றிய சில தலைமுறைகட்கும் வேண்டியதாயிருந்த தெல்லாம் மக்கள் விருத்தியும் [illegible]ந்தான். எனவே அக்காலத்துச் சட்டங்கள் அவைகளுக்கேற்றவாறு அமைக்கப்பட்டிருந்தல் வேண்டும். மக்களைப் பெறுதற்குத் தாயாராயும் இனத்தைப் பெருக்கி வருமாற்றலுடையவராயுமிருந்த பெண்கள் அதனாலேயே அக்காலத்து மிகவும் போற்றப்பட்டும் மரியாதை கொடுக்கப்பட்டும் வந்தனர். அவர்களைக் குறித்து நடைபெற்ற சண்டைகள் கணக்கிலடங்கா. ஆண் மக்கள் பிறக்கவேண்டும் என்றும் பெரிய வேள்விகளாற்றப்பட்டன. இம்மை மறுமையிரண்டிற்கும் ஒரு ஆண்பிள்ளை பிறக்கவேண்டுமென்பது கட்டாயமாயிருந்து வந்தது. இம்மையிலோ எதிரிகளிடமிருந்து தன்னினத்தாரையும் மக்களையும் தேசத்தையுங் காத்துவருதற்கு அவன் வேண்டப்படுகிறான். மறுமையிலோ தன் தந்தை 'நரக'ப்படுகுழியில் விழாதிருக்கும்படி தடுக்குமாறு அவன் வேண்டப்படுகிறான். இப்படி மறுமையைப் பற்றிக்கொண்ட ஒரு கருத்து முற்கூறிய இம்மையைப்பற்றிய கருத்தின் உடன்பெறப் பட்டதென்றேயாகும். தென்புலத்தார்கடன் ஆண் மகனலன்றித் தீர்க்கப்பட முடியாதென்பது முற்ற முடிந்த கொள்கையாகும். மக்கட் குழாம் நாட்டினர், இனத்தார், என்ற இம்மூவகையினருடைய முன்னோர்க்கும் (பிதிர்கள்) ஒவ்வொரு மகனும் மகளும் கடன் பட்டேயிருக்கின்றனர். ஆகவே அம்முன்னோரின் வழித்தோன்றிய இவர்கள் நல் வாழ்வும் பாதுகாப்பும், புகழும் பெருமையுமுற்று வாழவேண்டுமானால் அவர்களிடைப் போதுமான வளவிற்கு ஆண் மக்கள் திரண்டிருக்கவேண்டுமென்பது தானே பெறப்படுமன்றோ? அது நோக்கியே ஒருவனது முன்னோரை மகிழ்விக்கவேண்டி 'பித்ருயாகம்' என்ற 'யாக' முறை ஏற்படுத்தப்பட்டது. இக்கடன் ஒவ்வொரு குடும்பத்தாருடைய மனதிலும் என்றென்றுமிருந்து வருமாறு நினைப்பூட்டப் பட்டு வந்தது. இதனினும் பெரிய 'யாக' முறைகளுங் கையாளப்பட்டு வந்தன. வேத காலத்தில் ஒரே பெண்ணை ஒருவன் மணக்க வேண்டுமென்ற ஒப்பற்ற ஒரு கட்டாய வழக்கமிருந்தது. ஆயினும்பின்னரேற்பட்ட நிலைமை மாறுதலினால் அது மாற்றப்பட்டு மணமுறையு மெளிதாக்கப்பட்டு எவ்விதத்தாலாவது மக்கட்பேறு அடைதல் வேண்டுமென்பதே தலையாகக் கொள்ளப்பட்டது. ஆகவே தற்கால கருத்துகளைப்போல அக்காலத்திலும் சிற்சில வகைகளில் ஒழுக்க மீறிய வழக்கங்களும் கண்காணிக்கப்பட்டு அவைகள் ஒருவாறு சட்ட வரம்பிற்குட்பட்டவாறுந் திருத்தியமைக்கப்பட்டன. இந்து மண முறையில் கூறப்பட்டிருக்கும் எட்டு வகை மணங்களும் இதற்காதாரமாகும். அக்காலத்தனவாகக் காணப்படுஞ் சமூக வரலாறுகளும் புத்த ஜாதகங்களும், இராமாயணம், மகாபாரதம், என்ற இவைகளிற் காணப்படும் ஆண் பெண்களது களவொழுக்கங்களும், இதையே வற்புறுத்தும். விதுரன் பிறப்பைப்போன்று மகாபாரதத்திடைக் கூறப்படும் பல கதைகளும் என் கூற்றையே யாதரிக்கின்றனவாம். அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் நடந்த மணம் [illegible]க்கட்டானதொன்றன்றோ? இவையெல்லாம் அக்காலத்து வழக்க ஒழுக்கத்துப் புறம்பானவை யென்று கூற முடியாது. ஏனெனில், அவைகள் எழுதப்பட்டிருக்கிற முறையில் கெஞ்சி மன்னிப்புக் கேட்கும் கருத்தொன்றுந் தொனிக்கவில்லை. அன்றியும் இத்தகைய கதைகளைக் கண்டித்ததாக வெங்குங் காணப்படவேயில்லை.

### சமூகத்தில் மகளிர் நிலை.

அக்காலத்திற் பெண்கள் சுயேச்சையுடையவர்களாகவே யிருந்தனர். ஆடவர்களுக்கு அடங்கி நடக்க வேண்டியவர்களாக விருந்தாலும் உண்மையில் அவர்களை விட உயர்ந்த பதவியிலேயே இருந்து வந்தார்கள். கன்னிகையாகவும், மடந்தையாகவும், மக்களாகவும், தாயாகவும் அவளிருத்தற்குரிய இவ்வகைத்தாய எந்நிலையிலும் அவள் மரியாதை செய்யப்பட்டே வந்தாள். நியாய முறைப்படி அதனால் அவள் சமூகத்திற்கும் இனத்திற்குமே அச்சாணியாக விருந்து வந்தாளென்றே கூறலாம். நாம் மேற்கூறிய மகளிர்ப் பருவங்களில் ஒவ்வொன்றிற்குமேற்ற விழா நாட்களுங் குறிக்கப்பட்டு வந்தன. எவ்வெவ்வகையில் அவர்களை மகிழ்வித்துத் திருப்தியுடையவர்களாயிருக்குமாறு செய்ய முடியுமோ அவ்வளவும் கையாளப்பட்டு வந்தன. இந்து வேத காலத்திலிருந்து புராண காலம் வரையில் பெண்களுக்கு 'முக்காடிடும்' வழக்கமாகிய ஒரு வழக்கமிருந்ததாக எங்குங் கூறப்படவில்லை. அவர்கள் கல்வி கற்பதிலும் ஒரு தடையோ வரம்போ ஏற்படுத்தப்பட்டதாகவுந் தெரியவில்லை. கலையினெல்லாத் துறைகளும் அவர்களுக்குமுரியனவே. க்ஷத்திரியப் பெண்கள் என்று கூறப்படும் அரச குடும்பப் பெண்கள் போர் முனைகளிலெல்லாம் நன்கு பயிற்றப்பட்டு வந்தனர். குதிரை மீதிவர்ந்தனர். போட்டிப்போர் புரிந்தனர். இவ்வளவெல்லாமிருக்க அவர்களுடைய தாழ்மை நிலையெப்பொழுது துவங்கிற்று என்று அறுதியிட்டுக் கூற முடியவில்லை. அத்தாழ்மைநிலை வந்ததற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி பலர் பலதிறப்பட்ட கருத்துகளையுடையவராகயிருக்கக்கூடும். அது எவ்வாறாயினும் கிருஹிய சூத்திரங்களில் ஒரு பெண்ணானவள் ஒரு குடும்பத்தில் எத்தகைய உயர் நிலையை யடைந்திருந்தாளென்பதும், ஆடவர்கள் பெண்களை எவ்வளவு கவலையுடன் குறிகொண்டு காத்துவரவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தார்களென்பதும் அதிலும் முக்கியமாக பெண்களுடைய உணவு குறித்தும் அவர்களுடைய பிள்ளைப் பேறுகாலங்களில் அளிக்கப்பட வேண்டிய உணவுகளைக் குறித்தும் எவ்வளவு கவலையாகக் கவனித்து வருமாறு வேண்டிக் கொள்ளப் பட்டார்களென்பதும் நன்கு வெளியாகின்றன.

ஆகவே அக்காலத்து மகளிரோடு இக்காலத்து மகளிரை ஒப்பிட்டால் மனிதனுக்கும் ஒரு சோளக்கொல்லை காவல் புரிய வமைக்கப்பட்டிருக்கும் ஒரு மனிதவுருவமைந்த பொம்மைக்கும் எவ்வளவு வேறுபாடு தோன்றுமோ அவ்வளவு வேறுபாடுகளுந் தோன்றும். மனித சமூகத்திற்கே பெண்ணானவள் அச்சாணியாவாள். ஆதலால் ஒரு தேயத்தார்க்கும் ஒரு இனத்

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

காட்டுப்பாடியில் சென்ற 17 தேதி நடைபெற்ற

## ஆதிதிராவிட மகா நாட்டில்

ஸ்ரீமான் M. C. ராஜா M. L. A. அவர்கள் செய்த

அக்கிராசனப் பிரசங்கச் சுருக்கம்

# மநுதர்ம சாஸ்திரம் சாம்பலாகவேண்டும்.

நடக்க சில நாட்களாக தென் இந்தியாவில் பிரயாணம் பண்ணிவருகிற கனம் காந்தி அவர்களுக்கு நம்மவர்களில் அநேகர் ஆங்காங்கு வரவேற்பு உபசார பத்திரங்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவைகளுக்கு அவர் பதில் விடை கொடுக்கும் சமயங்களில், மதுபானத்தையும் கோமாம்சம் தின்பதையும் ஒழிக்க வேண்டுமென்பதாய் நம்மவர்களுக்கு பிரசங்கம் செய்திருக்கிறார். சிதம்பரத்தில் நந்தனார் மடத்திலும் இப்படித்தான் இவர் பிரசங்கித்திருக்கிறார். நந்தனார் மடத்தைச் சேர்ந்த நம்மவர்கள் சைவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற போலி உயர் குலத்தவரை விட மேன்மையாக ஜீவிக்கின்றவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான். அவ்விடத்தில் நந்தனார் கோவிலுக்கு வாசற்படியை ஸ்தாபகம் செய்யப்போன கனம் காந்தி அவர்கள் நம்மவர்களை குடிகாரர்கள் என்றும் கோமாம்சம் தின்பவர்கள் என்றும் தப்பாக எண்ணி நம் ஜனங்களை அவமானப்படுத்தும்படியான பிரசங்கத்தைச் செய்தது தப்பு. கனம் காந்தி அவர்கள் நம் ஜனங்களின்மேல் உண்மையில் ஊக்கமுள்ளவராக இருக்கும்பட்சத்தில், சிதம்பரம் நந்தனார் மடத்தின் தலைவராகிய ஸ்ரீமத் ஸ்வாமி சகஜாநந்தரை சற்று பொறுமையுடன் இவ்விஷயங்களைப்பற்றிக் கேட்டிருப்பாராகில், இவ்விஷயங்களின் உண்மையைக் கட்டாயம் அறிந்திருப்பார். எப்படி உயர் குலத்தார் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் செத்துப்போன மாடுகளை இவ்வேழைக் குடிகளிடம் கொடுத்து, அவைகளை புதைக்கவிடாமல் தடுத்து அம்மாமிசங்களைத் தின்னும்படி கட்டாயப்படுத்துகிறார்களென்றும் அப்படி தின்னமாட்டேன் என்று மறுக்கும் பட்சத்தில் அந்த ஏழைக்குடிகளை எப்படி ஹிம்சை செய்து தடி முதலிய ஆயுதங்களினால் அவர்களை அடித்து கஷ்டத்திற்குஆளாக்குகிறார்களென்றும் அறிந்திருப்பார். இவ்விஷயத்தில் கனம் காந்தி எட்டுச்சுரக்காய் என்று சொல்ல நான் துணிகிறேன். இவ்வளவு நாட்களாக தென் இந்தியாவில் பிரயாணம் செய்துகொண்டிருக்கிற கனம் காந்தி நம்மவர்கள் குடியிருக்கும்படியான சேரிகளையும் நத்தங்கள் என்று சொல்லும்படியான இடங்களையும் இவர் நேராகப் போய் பார்த்ததுண்டா? அப்படியானால் எத்தனை சேரிகளையும நத்தங்களையும் இவர் பார்த்திருக்கிறார்? அவ்விடங்களில் குடியிருக்கும் ஏழை ஜனங்கள் எத்தனைபேரை இவர் நேரில் கண்டு கலந்து பேசியிருக்கிறார்? லார்ட் கோஷன பிரபு சிதம்பரம் நந்தனார் மடத்திற்கு வந்திருக்கும்போது இந்த ஏழை ஜனங்களைக் கண்டு அவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்கள் அருகில் அழைத்துக் கொண்டு போகும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். நான் அவரை அழைத்துப்போனேன். அப்பிரபு அவ்வேழை ஜனங்களோடு நேரில் வார்த்தையாடினார். கனம் காந்தி அவர்கள் சாதாரண புருஷரல்ல, இவர் உலக பிரசித்திப் பெற்றவர், இவருடைய பிரசங்கங்களை பூலோகத்திலுள்ளவர்களெல்லோரும் வெகு ஆவலுடன் வாசிக்கிறார்கள். ஆனபடியால் இவர் பேசும்போது மிகவும் ஜாக்கிரதையாக பேசவேண்டியது அத்தியாவசியம். நம்மவர்களை இதுவரையிலும் உயர்குலத்தார் என்று சொல்லிக்கொள்பவர்கள் படுத்திய அவமானங்கள் போதும். மேயோ அம்மையார் "தாய் இந்தியா" என்னும் புஸ்தகத்தில் ஏதோ இந்தியர்களை அவமானமாக எழுதி விட்டாரென்று உயர் குலத்தார் என்பவர் கூக்குரல் இடுகிறதை காண்கிறோம். கனம் காந்தி அவர்கள் மேயோ அம்மையாரை "சாக்கடை பரிசோதி" என்று எழுதி இருக்கிறார். நம்ஜனங்களை இப்படி அவமானமாக பேசுகிறவர்களை என்ன பரிசோதி என்று சொல்லவேண்டியது. நம் ஜனங்கள் ஜீவிப்பதற்கு வேண்டிய உணவு பதார்த்தங்கள் வாங்கவே போதுமான தினசரி வருமானம் இல்லையே. இப்படி இருக்க மதுபானத்திற்கும் மாமிசத்திற்கும் வருமானம எது? மேலும் மதுபானக்கடைகள் உயர்குலத்தார்கள் என்று சொல்லிக்கொள்ளும்படியானவர்களிருக்கும் இடங்களில் ஸ்தாபித்திருக்க இவர்கள் எப்படி அக்கடைகளுக்குள் நுழைய முடியும்? உள்ளபடி விஷயங்களை ஆராய்ந்து பார்த்தால் நம்மவர்களில் ஏறக்குறைய எல்லோரும் இப்பேர்ப்பட்ட அவதூறான பேச்சுகளுக்கு அருகரல்லர். கனம் காந்தி அவர்கள் இப்பேர்ப்பட்ட உபதேசங்களை நம்மவர்கட்குக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை உயர்குலத்தவர்களில் மதுபானம் அருந்துகிறவர்களில்லையா? மாமிசம் புசிக்கிறவர்களில்லையா; உயர் குலத்தவர்களில் எத்தனையோ பேர்கள் பன்றி, மான், ஆடு, முயல், காட்டுப்பன்றி, பெருச்சாளி, பூனை, கோழி, வாத்து, முதலியவைகளின் மாமிசத்தை தின்கிறதில்லையா? கனம் காந்தி அவர்கள் அவர்களுக்கு இம்மாதிரி பிரசங்கம் செய்தாரா? தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன் முன்வந்த கனம் காந்தி அவர்கள் இது வரையில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறார்? இதை நாம் அறிய விரும்புகிறோம். சிறந்த, எனது ஆப்த சிநேகிதராகிய கனம் சத்திய மூர்த்தி ஐயரவர்கள் சர்வகலாசாலையின் பிரதிநிதியாக சென்னை சட்டசபையில் விளங்குகிறார். இவர் சுயராஜ்ய கட்சியில் முக்கியமான ஓர் அங்கத்தினர். இவர் மேயோ அம்மையாரைப்பற்றிக் கூடிய கண்டனைக்கூட்டத்தில் அவ்வம்மையார் என்னை நேரில் கண்டதாக கூறியிருக்கிறார். இது சுத்தப் பிசகு. மேயோ அம்மையார் கறுப்போ, வெண்மையோ, நெட்டையோ, குட்டையோ என்கிறதுகூட எனக்குத் தெரியாது சர்வகலாசாலையின் பிரதிநிதியாகிய சத்திய மூர்த்தி ஐயர் இம்மாதிரி பொறுப்பில்லாத வார்த்தைகளை பகிரங்கமேடையில் ஏறி பேசுவது அழகல்ல. மேயோ அம்மையார் அறியாமையினாலும் மூடத்தனத்தாலும் "இந்திய மாதா" என்னும் புத்தகத்தை எழுதி இருக்கிறார் என்று இவர் கூறுகிறார். இவர் அதிகம் அறிந்தவர் போலும்! அறிவுடையவர்போலும் நடித்துக்கொள்வது விந்தையே! ஆதி திராவிடர் கல்யாணங்களில் பிராமணர் புரோகிதம் செய்வதில்லை என்றும ஆனால் மேயோ அம்மையார் தன் புத்தகத்தில் செய்வதாக எழுதியிருப்பது பொய் என்றும் இவர் சொல்லுகிறார். சமீபத்தில் சென்னையில் கனதன வியாபாரியாகிய கனம் வீ. முதுந்த பிள்ளை அவர்கள் வீட்டில் நடந்தகலியாணத்தில் தென் இந்தியா யாத்திரை ஸ்தலங்களில் பேர்போன காஞ்சிபுரத்திலிருந்து பிராமணர்கள் அக்கல்யாணத்திற்கு வந்து புரோகிதம் செய்தது இவருக்கே தெரியாதா? இவருக்குத் திருஷ்டாந்தங்கள் இன்னும் வேண்டுமானால் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். கனம் சத்திய மூர்த்தி ஐயர் அறியாதவரா? இல்லை மேயோ அம்மையார் அறியாதவரா? இவர் சொல்லுகிறபடி மேயோ அம்மையார் என்னை நேரில் கண்டு பேசி இருப்பாராகில் அந்தம்மாள் அறியாத அநேக அரிய விஷயங்களை அவருக்குத் தெரிவித்து அவர் எழுதிய புஸ்தகத்தில் நம்மவர்களைப் பற்றி பேசிய அதிகாரத்தில் இன்னும் கொஞ்சம் காரசாரமாய் எழுதச்சொல்லி இருப்பேன் ஜீவகாருண்யம் என்பதை நினையாமலும் எண்ணுமலும், நம் ஜனங்களை ஹிம்சிக்கும் போலி உயர் குலத்தவர்களின் அக்கிரமங்களை பகிரங்கமாய் எழுதும்படியும் சொல்லி இருப்பேன்

மேயோ அம்மையார் எழுதிய 'தாய் இந்தியா' என்னும் புஸ்தகத்தை நான் பூர்த்தியாக வாசித்திருக்கிறேன். அதில் நம் இந்திய ஸ்திரீகளைப் பற்றி அவதூறாய் எழுதி இருக்கும் சில விஷயங்களைத் தவிர மற்றெல்லா விஷயங்களும் சரி என்று சொல்ல நான் துணிகிறேன். இந்த புஸ்தகத்தை அடியோடே தொலைத்துவிட வேண்டுமென்றும், இப்புஸ்தகத்தை சர்க்கார் கைப்பற்றிக்கொண்டு விற்பனையை அடியோடு நிறுத்தவேண்டுமென்றும் செய்யும் கிளர்ச்சி சரி அல்ல. இப்புஸ்தகத்தினால் நம் இந்தியர்க்கு தீங்கு ஒன்றுமே கிடையாது. இந்த சமயத்தில் நான் உங்களுக்கு ஒன்று சொல்லத்துணிகிறேன் அதாவது, இம்மகாநாட்டில் நாம் ஒரு தீர்மானம் செய்ய வேண்டியது அவசியம். மநுதர்ம சாஸ்திரம் என்று சொல்லும்படியான அந்த அதர்ம சாஸ்திரம் இருக்கும் வரையிலும் நம் ஜனங்களுக்கு அவமானத்தைத் தந்து அவர்களின் முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் தடையை உண்டாக்குகிறது. அந்த மநு அதர்ம சாஸ்திரம் இருக்கும் வரையிலும் நம் ஜனங்களும் முன்னுக்கு வரமாட்டார்கள். இந்தியாவும் ஒரு நாளும் விருத்தியாகாது. ஆனபடியினால் இந்த புஸ்தகத்தை அடியோடு தொலைக்க வேண்டிய முயற்சி நாம் செய்ய வேண்டியது அவசியம். இம்மகாநாட்டில் கவர்ன்மெண்டார் இந்த மநுதர்ம சாஸ்திர புஸ்தகங்களை எல்லாம் உடனே கைப்பற்றிக்கொண்டு அவைகளை எல்லாம் நெருப்பில் தகனம் செய்து அந்த சாம்பலைக்கூட இந்தியாவில் வைக்காமல் சமுத்திரத்தில் கலக்கிவிடவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யவேண்டும். இது அத்தியாவசியம். இது செய்யாவிட்டால் நம் ஜனங்களுக்கும் இந்திய மாதாவுக்கும் விமோசனமே கிடையாது. மேலும் இந்துக்களாகிய நம்மை இந்து ஆலயங்களில் பிரவேசிக்கக்கூடாது என்று தடுப்பதை நிறுத்தும்படி நாம் கிளர்ச்சி செய்யவேண்டிய தவசியம். இந்துக்களாகிய நம்மை இந்து ஆலயங்களில் பிரவேசிக்க கூடாதென்று தடுப்பதைவிட அவமானம் வேறில்லை. அப்படி நம்மவர்களை உட்பிரவேசிக்க விடாமல் தடுக்கும் ஆலயங்களை உடனே எடுத்து விடவேண்டுமென்று நாம கிளர்ச்சி செய்யவேண்டிய தவசியம். இப்படி இந்த ஆலயங்களை வைத்துக்கொண்டு நம்மை அவ்வாலயங்களில் பிரவேசித்து அவ்வாலயங்களில் இருக்கும் கடவுளை நாம் வணங்கக்கூடாதென்று தடுக்கும் அவமானத்தைவிட வேறு பெரிய அவமானம் நமக்குக்கிடையாது. இவ்விஷயத்தில் கனம் காந்தி முதலியவர்கள் என்ன செய்கிறார்கள்? இவ்விஷயத்திலல்லவோ சத்தி

யாக்கிரம் ஆரம்பிக்கவேண்டியது. இதை விட்டுவிட்டு ஏதோ நீல் பதுமை ஒன்று சென்னைப்பட்டணத்தில் இருக்கிறதென்றும், அப்பதுமை அங்கிருப்பது இந்தியர்களுக்கு பெருத்த அவமானமென்றும் அதை எடுத்துவிடவேண்டுமென்றும் ஓர் கிளர்ச்சியைக் கிளப்பி சத்தியாக்கிரகம் ஆரம்பித்திருப்பது ஓர் விந்தையே! நீல் தளகர்த்தர் இந்தியர்களை (ஆண், பெண், குழந்தைகள்,) கொலைபாதகம் செய்திருப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் இப்பதுமை 1860-ம் வருஷம் பொதுஜனங்களின் திரவிய சகாயத்தால் நீல் தளகர்த்தனுடைய அருமையான வீரியத்தை புகழ்வதற்காக ஏற்படுத்தப்பட்டதென்று அப்பதுமையினடியில் எழுதி இருக்கிறதைக் காண்கிறோம். நம் ஜனங்களை அன்றும் இன்றும் உயிரோடு வதைத்து கொடுமைப்படுத்தி ஹிம்சிக்கும்படியான மேல்ஜாதி என்று சொல்லிக்கொள்ளும் இந்தியர்களை என்ன செய்யவேண்டும்? இப்படி நம்மவர்களை உயிரோடு வதைத்து ஹிம்சைப்படுத்துவதைவிட நம்மை வேரோடு அறுத்து தொலைத்துவிடுவது உத்தமம் என்றே சொல்லுவேன். நீல் தளகர்த்தர் பதுமையை தொலைக்கவேண்டுமென்று என் நண்பராகிய கனம் சத்தியமூர்த்தி ஐயருக்கும் ஆவேசம் வந்து பேசுவதையும் ஆடுகிறதையும் பார்க்க எனக்கு மெத்த பரிகாசமாயிருக்கிறது. சென்னை சர்வகலாசாலை பிரதிநிதியாகிய கனம் சத்தியமூர்த்தி ஐயருக்கு இது வரையிலும் நீல் தளகர்த்தர் செய்த அட்டூழியங்கள் தெரியாமலிருந்தது மிகவும் ஆச்சரியம். நீல் தளகர்த்தரின் சிலையை எடுத்துவிடவேண்டுமென்கிற கிளர்ச்சியானது நமக்கு ஓர் எச்சரிக்கையைக் கொடுக்கிறது; ஏனென்றால் 1921-வருஷம் சென்னை மில் கலகத்தில் ஆதிதிராவிடர்களை சென்னைப்பட்டணத்திலிருந்து அப்புறப்படுத்திவிடவேண்டுமென்று உயர் குலத்தவர் என்று சொல்லிக்கொள்ளும் இந்திய தலைவர்கள் எடுத்த முயற்சியை இன்னும் மறக்கவில்லை. இப்பொழுது இத்தலைவர்களுக்கு இந்திய சீர்திருத்தத்தின்படி கொஞ்சம் அதிகாரம் கிடைத்துவிட்டதென்று தங்களுக்கு இஷ்டப்படாதவைகளை விலக்கிவிட துணிந்திருக்கிறார்கள். இம்மாதிரி கிளர்ச்சிகளுக்கு சர்க்கார் இடங்கொடுப்பாராகில் இந்தியர்களுக்கு இந்திய சீர்திருத்தத்தின்படி அதிகாரம் அதிகரிக்குமாகில், உடனே அவர்கள் அவர்களுக்கு வேண்டாதவரும் அவர்களால் நசுக்கப்பட்டு வருபவருமாகிய ஏழை ஜனங்களாகிய நம் மீது இப்பேர்ப்பட்ட கிளர்ச்சிகளைத்திருப்பி நம்மையும் நாட்டைவிட்டு காட்டிற்கு ஓட்டிவிட முயற்சிகள் செய்வார் என்பதில் சந்தேகமே இடையாது. ஆனபடியினால் சகோதரர்களே! இம்மாதிரியான கிளர்ச்சிக்கு நாம் இடங்கொடுக்கவே கூடாது.

நமக்கு சுயராஜ்யத்தின் மேல் அதிகபற்றுதலுண்டு. ஆனாலோ இந்தியாவுக்கு உடனே சுயராஜ்யத்தைக் கொடுக்கவேண்டுமென்கிற கக்ஷிக்காரருடன் நாம் சேரவே முடியாது.

அவுஸ் ஆப் காமன்ஸ் என்னும் பார்லிமெண்ட் மகா சபையால் ஒடுக்கப்பட்டவர்களாகிய நம்மவர்களின் நிலைமையை ஆராய்ந்தறிந்து நம்மவர்களின் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று சர். ராபர்ட்ஸ் தாமஸ் கேள்வி கேட்டதற்கு இந்தியாவுக்குப் போகப்போகிற ராயல் கமீஷன் அவைகளைப்பற்றி விசாரணை செய்யுமென்று வின்டர்டன் பிரபு பதில் அளித்திருக்கிறார். இந்த ராயல் கமிஷனில் நம்மவர்களின் பிரதிநிதி திட்டமாக நியமிக்க வேண்டும். அப்படியில்லாமல போனால் இந்த கமிஷன் ஓர் தலைப்பட்டதென்றே மதிக்கப்படும். நம்மவர்களின் காரியங்களை எடுத்துப்பேசவும் நம்மவர்களின் உரிமைகளை கொள்ளவும் நம்மவர்களில் ஒருவர் இப்பேர்க்கொத்த கமிஷனில் நியமிக்கப்பட வேண்டியது மகா அவசியம். இந்த கமிஷனில் அங்கத்தினர்களாக வேண்டுமென்று அபேக்ஷிக்கிற உயர்குல இந்தியர்கள் ஒடுக்கப்பட்டவரின் உண்மையான நிலையைப் பற்றி எடுத்துக்காட்டவும் அவைகளுக்குப் பரிகாரம் கிடைக்க சிரமம் எடுக்கவும் முயற்சிக்கமாட்டார்கள். "எருது நோவு காகத்துக்கு என்ன தெரியும்" என்ற முதுமொழிப்படி நம்முடைய கஷ்ட நஷ்டங்களுக்குக் காரணராகிய இதர ஜாதியார் அவைகளை உணரமாட்டார்கள். "ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுமோ" ஆதலின் நம்முடைய பிரதிநிதி ஒருவர் அதில் அங்கத்தினராயிருக்கவேணடு மென்றும் சத்தியத்தை இந்திய ராஜாங்கத்தார் அறிந்து கொள்வார்களென்றும் நம்புகிறேன்.

°° °° °°

இந்த பிரசங்கத்தை முடிப்பதற்கு முன் நான் உங்களுக்கு ஓர் முக்கிய விஷயததைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நான் சமீபத்தில் வட இந்தியாவுக்குப்போயிருக்கும் பொது அவ்விடத்து ஜனங்கள் நம்மவர்களைப்பார்க்கிலும் அதிக பலசாலிகளாக இருக்கிறதுமல்லாமல் தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் சக்தியுடையவர்களாயிருக்கிறதைக்கண்டேன். அவ்விடத்தில் சாதாரணமாய் ஒவ்வொருவரும் குஸ்தி, குத்துச் சண்டை, கோல், கத்தி, பாணா முதலிய பயிற்சியில் தேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். ஏழெட்டு வயது சிறு பிள்ளைகளுக்கும் இவ்வித பயிற்சியை கற்றுக்கொடுக்கிறார்கள்! இவ்வித பயிற்சி நமக்கும் அவசியம். ஆனபடியால் நாமும் நம் பிள்ளைகளுக்கும் இம்மாதிரி தம்மைத்தாம் பாதுகாத்துக் கொள்ளும்படியான சிலம்பு முதலிய வித்தைகளில்பயிற்சிகொடுக்கவேண்டியது அவசியமென்று எனக்குத்தோன்றுகிறது. நம்முடைய ஜனங்கள் கோயில்பட்டி, காயல் பட்டணம், திருச்செந்தூர் முதலிய இடங்களில் இப்பேர்ப்பட்ட பயிற்சிகளில் தேர்ந்து இருக்கிறதை நான் நேரில் கண்டிருக்கிறேன். ஆனபடியால் நம் ஜனங்கள் குடியிருக்கும ஒவ்வொரு இடததிலும் தாலிம்கானா கோதா முதலியவைகளை ஸ்தாபனம் செய்து நம் ஜனங்களுக்கு தற்காப்புக்கு வேண்டிய யுத்தவித்தைகள் பயிற்றுவிக்கும்படியாக உங்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதுதான் நான் உங்களுக்கு முக்கியமாய் சொல்லவேண்டிய விஷயம்.

# கோஷா முறை.

## அதன் கொடுமைகள்.

### காலஞ்சென்ற பாபு கோவிந்த தாஸ் 'இந்தியன் ரிவ்யூ'வில் எழுதியது.

'படுதாத் திட்டம்' என்னும் கோஷா முறையை நீக்கிவிட்டால் குடி முழுகிப்போய் விடும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இதனால் குடும்பத்திற்குள் உள்ள ஐக்கிய பாவமும், அமைதியும் குலைந்துவிடும் என்பது அவர்கள் கருத்து. இப்பொழுது திரை மறைவிலிருந்து கொண்டு அயோக்கியர்களின் கண்ணில் தென்படுவதற்கு வழியில்லாமல், அவர்களுடைய மாயவலையில் சிக்காமல் இருந்து வரும் பெண்கள் அனாவசியமாய், நேர்மையற்ற மயக்கங்களுக்கு உள்ளாகாமல் காக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களை ஏன் திரை நீக்கி வீண் உலக அபவாதங்களுக்கு ஆளாக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. மனித வர்க்கத்தினிடத்திலேயே ஆண், பெண் சகலரிடத்திலும் அவநம்பிக்கை கொள்ளுவதால்தான் இங்ஙனம் கூறுகிறார்கள். சாஸ்திரத்தைப் படித்த ஹிந்துக்களுக்கு இத்தகைய கூற்று, இயற்கையில் ஏற்படும் மனித உணர்ச்சிகளை அறியாமையால் தான் உதிக்கின்றது என்று தோன்றும். இல்லற வாழ்க்கையில் இன்பம் நிலைபெறுவதற்கு அடக்கு முறையைக் கையாளுதல் பயன்படாது. பெரிய அரசியல் துறையிலானாலும், சிறிய இல்லறத் துறையிலானாலும், அடக்கு முறைகளைக் கையாளுவதால், தீமை ஒரு நாளும் அழிந்து விடாது; ஆனால் தற்காலிகமாய் அது மறைந்து உள்ளூரப் புகைந்து கொண்டு இருக்கும். பக்தியும், விசுவாசமும், அன்பும் கொடுங்கோலின் சவுக்கடியால் ஜனிக்கமாட்டா. ஒழுங்கு தவறி, நெறி முறைகளிலிருந்து வழுவி நடப்பவர்களை மணவாழ்க்கையின் நீடித்த இயல்பும், மூடு படுதாவின் கண்டிப்பும் திருத்திவிடப் போகிறதில்லை. இல்லறத்தில், தம்பதிகளில் ஒருவர் பலரை அனுபவிக்க வேண்டுமென்ற சித்தம் படைத்திருப்பின், இன்பம் உண்டாவது கடினம்; சாத்தியமில்லை. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சரியான சமயத்தில் அமைதியாய் இருவரும் பிரிந்து விடுவதே புத்தியுடைமையாகும். மனைவி விபசாரம் செய்வதை நேரில் கண்டு விட்டால் கணவன் கொலையும் புரியலாம் என்று இந்தியன் பீனல்கோட் சட்டம் இடமளித்தாலும் இத்தகைய எண்ணங்களே மிகவும் அநாகரீகமானவை. மனைவி என்றால் இதர ஜங்கம சொத்துக்களைப் போன்றவள் தான் என்றும், அதை திருடுகிறவனைக் கொன்று விடலாம் என்றும் இதினின்று ஏற்படுகிறது. இங்ஙனம் கொலை புரிந்து விடுவதால் ஒருவரும் பிறர் மனைவியைக் களவாடாமல் இருந்து விடப்போகிறதில்லை. இதே மாதிரி கணவன் மனைவியிடம் விசுவாசமின்றி வேறு ஸ்திரீகளுடன் சோரம் செய்வதை யறிந்த மனைவி, கணவனை பாஷாணமிட்டோ வேறெவ்வகையிலோ கொலை செய்து விட்டால் அவளும் குற்றமற்றவள் என்று சட்டம் தயாள சிந்தை பாராட்டுவதென்றால் சட்டம் நேர்மையானது என்று ஒப்புக்கொள்ளக்கூடும்.

ஏற்கனவே கணவன் மனைவிகளுக்குள் மனஸ்தாபம் இல்லாத வரையில் விபசாரம் நேருகிறதில்லை. திரை போட்டு மூடிக்கொண்டு கோஷாக்களாயிருப்பவர்களைவிட இதர ஹிந்து ஸ்திரீகள் தாழ்ந்தவர்களா? அவர்கள் தங்கள் குடும்பங்களின் சௌகரியங்களை கவனிப்பதில்லையா? 'படுதா'வுக்குள் அடைபட்டுக் கிடப்பவர்களைவிட அவர்கள் ஒழுக்கத்தில் குன்றியவர்களா? ஸ்திரீகளின் பதவியில் தாழ்ந்தவர்களா? நாகரீகம் குறைந்தவர்களா? மேலும் இந்தப் படுதாவின் கடுமைதான் எவ்வளவு தூரம் அனுசரிக்கப்படுகின்றது? படுதா போட்டுக்கொண்டிருக்கும் ஹிந்து ஸ்திரீகள் கோயில் குளங்களுக்கும், நதிகளுக்கும் போகிறதில்லையா? சாதாரண மனிதர்களையும் விட எவ்வழியிலும் மேலானவர்களல்லாத உண்மையில் கேவலமான குடும்பப் புரோகிதர்கள் முன்பாக இவர்கள் படுதாவை நீக்கிவிட்டுத் தென்படுகிறதில்லையா? உண்மையில் சௌகரியம்போல் இந்தப் படுதாவை நீக்கிக்கொள்ளவும் போட்டுக்கொள்ளவும், இடத்திற்குத் தக்கபடி வழி இருக்கிறது. இதனால் எத்தகைய நன்மையும உண்டாவதாகக் காணவில்லை. தாய்மார்களை கல் மதில்களுக்குப் பின்னால் இருட்டில் தனிமையாய் அடைத்து வைக்கும் ஒரு முறை அனுசரிக்கப்படும் வரையில், அதனால் அத்தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் ஆண்மையும், நாகரீகமும் பாதிக்கப்படாமல் போய்விடுமா? இந்த கோஷா முறையால் தேச மக்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# புரசைவாக்கம் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்.

பார்ப்பனரல்லாத வாலிபர்களுக்கு

## திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் பேருரை.

சென்ற 19 தேதி புதன்கிழமை மாலை 6 மணிக்குச் சென்னைப் புரசைவாக்கம் பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கத்தின் ஆதரவில் புரசைவாக்கம் அன்னதான சமாஜத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்குத் திரு: சொக்கலிங்க முதலியார் பி. ஏ. பி. எல். அவைத்தலைமை வகித்தார்.

### திரு. நாயக்கர் பேசியதாவது.

பெருத்த சந்தோஷ ஆரவாரத்தினிடையே எழுந்து திரு. நாயக்கர் அவர்கள் பின் வருமாறு பேசினர்.

அன்புள்ள வாலிபர்களே

அவைத் தலைவர் என்னைப்பற்றி பெருமைபடுத்தி பேசியதெல்லாம் அவர்கள் என் மீது கொண்ட அன்பே யன்றி வேறல்ல. அவர்கள் சொல்லிய வற்றிற்கு நான் சிறிதும் பொருத்தமுடையவனன்று. ஆனால் எனது கொள்கைகளையும் தொண்டுகளையும் ஆதரித்து பேசியிருக்கின்றதிலிருந்து என் கொள்கைக்கு சிறிதாவது நாட்டில் மதிப்பிருக்கிறதென்றும் மக்கள் ஆதரிக்கிறார்களென்றும் ஏற்படுவதோடு, இதனால் என தொண்டுக்குப் பின் பலமிருக்கிறதென்றும் நான் உணர்கிறேன்.

### வாலிபர்கள்.

எனது எண்ணமெல்லாம் எப்பொழுதும் வாலிபர்களாகிய உங்கள் மீதுதான் போய்க்கொண்டிருக்கிறது. ஏனெனில் மோட்ச லோகத்தில் ஒருகாலும் பூலோகத்தில் ஒருகாலும் வைத்துக்கொண்டு வீண் வேதாந்தம் பேசிக்கொண்டிருக்கிற பெரியோர்களைப்பற்றி எனக்கு அதிக கவலை இல்லை. ஆகையால் வாலிபர்களாகிய உங்கள் முன் பேச எனக்கு அளவில்லா ஆசையுண்டாகின்றது. சமீபத்தில் இரண்டு வாலிப மகாநாடுகள் கூடப்போகின்றன. அவைகளில் ஒன்று அகில இந்திய வாலிபர் மகாநாடென்றும், மற்றொன்று பார்ப்பனரல்லாதார் வாலிபர் மாகாண மகாநாடு என்றும் சொல்லப்படும். அகில இந்திய வாலிபர் மகாநாட்டிற்குத்தான் நமது திரு எ. இராமசாமி முதலியார் அவர்கள் சென்றிருக்கிறார்கள். சமீபத்திலே அதாவது இம்மாதம் 22, 23-ம் தேதிகளில் பார்ப்பனரல்லாதார் வாலிபர் மகாநாடு இங்கு கூடும். அதற்காக தமிழ் நாட்டிலிருந்தும் ஆந்திர நாட்டிலிருந்தும் பார்ப்பனரல்லாத வாலிபர் பலர் வருவரென எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டிற்குத் தொண்டு செய்வதற்கும் தலைமைப்பதவி பெறுவதற்கும் வாலிபர்கள் தான் சிறந்தவர்கள் என்பது எனதபிப்பிராயம். அதிலும் தலைவர் பதவிக்குப் பெரியோர்கள் என்பவர்கள் பயனில்லை. அவர்களை உலக வாழ்க்கையும் சுயநலமும் சுற்றிக்கொள்ளுகின்றது. பொது வாழ்க்கைக்கும் தலைமைப்பதவிக்கும் சுயநலமென்பது கண்டிப்பாய் இல்லாதவர்களாகவே இருக்கவேண்டும். அநேக பெரியோர்கள் தாங்கள் முதலில் எந்த எண்ணம் கொண்டு பொது நல சேவையை ஆரம்பித்தார்களோ அதையே மறந்துவிடுகிறார்கள். உலக வாழ்க்கையில் சம்மந்தம் ஏற்பட்ட பிறகு சுயநலமில்லாமல் பொது நல வேலை செய்வது என்பது அவர்களுக்கு இலேசான காரியமல்ல. எனவே பரிசுத்தமான வாலிபர்களால்தான் என்தொண்டு முற்றும் பயன்படுமென்று எண்ணியிருக்கின்றேன். ஏனென்றால் அவர்கள் உலக வாழ்க்கையில் ஈடுபடும் முன் அவர்கள் மனது பரிசுத்தமாயிருக்கும். பரிசுத்தமான மனதையுடைய இவ்வாலிப காலத்தில் ஒரு காரியத்தை ஆரம்பித்து நடத்தினால், நாம் மேற்கொண்ட காரியம் பலன் பெறும். வாலிபர்கள் காரியங்களை சீரும் சிறப்பும் உண்டாகுமாறு நடத்திக்காட்டுவார்களானால் பெரியோர் நம் தொண்டைப்பற்றி கொண்டாடி அவர்களும் ஒத்துழைக்க நம்மிடம் வருவார்கள். என்னைப்பொருத்த வரையில் நான் என்னும் ஒவ்வொரு எண்ணத்திற்கும் வாலிபர்கள் கிடைத்தால் தான் பலன் பெறலாமே அல்லாது பெரியவர்கள் கிடைத்தால் பயன் எதிர்பார்க்க முடியாதென்றே எண்ணிவருகின்றேன். வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை மிகுதியும் பொது வாழ்விற்கு உபயோகப்படுமாறு சரிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

### பார்ப்பனரல்லாதார் வாலிபர் மகாநாடு.

சிலர் பார்ப்பனரல்லாதார் என்று ஒரு பிரிவு காட்டத்தக்கபெயர் ஏன் என்கிறார்கள். சிலர் இம்மாதிரி பிரிந்துக்கொண்டே போனால் உலக நிலை என்னவாகும் என்கிறார்கள். மற்றும் சிலர் பார்ப்பனரல்லாதார் என்கிற பிரிவு உணர்ச்சி வாலிபருக்கு உண்டாகக்கூடாது என்கிறார்கள். இவர்கள் சொல்வதெல்லாம் நமது நாட்டின் உண்மையான நிலைமையைக் கவனியாதவர்களுக்கு வேண்டுமானால் ஒரு சமயம் நியாயமாய்த் தோன்றலாம். நமது நாட்டின் நிலைமையைக் கவனிக்கின்ற காலத்தில் இந்தப் பிரிவு ஏற்படுத்தியது யார்! இது எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது! என்பதைக் கவனிக்கவேண்டும். யோசித்துப் பார்த்தால் 1000 கணக்கான வருடங்களுக்கு முன்பே ஏற்படுத்தப்பட்டதென்பது விளங்காமல் போகாது. நமது நாட்டை ஆயிரக்கணக்கான பிரிவுகளாக நாம பிரிக்கவில்லை. 1000 கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே ஒரு வகுப்பார் நம்மைப் பிரித்து வைத்து தங்களை உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு நம்மை கொடுமையாய் நடத்திவருகின்றார்கள். ஒரு கூட்டத்தாரை மாத்திரம அதாவது நம்மை பார்ப்பனர்கள் என்பவர்களை நீக்கி மற்றவர்களை பார்ப்பனரல்லாதார்கள் என்று பிரித்தது இன்றல்ல நேற்றல்ல. ஆதலால் அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல. தவிர சிலர் பார்ப்பனரல்லாதார் என்கிற பெயர் கூடாது என்கிறார்கள். அதாவது பார்ப்பனரல்லாதார் என்கிற பெயரைத் தவிர்த்து வேறு பெயரிடக்கூடாதா வென்கிறார்கள். கிரமமாக எல்லா மக்களும் ஒப்புக்கொள்ளும்படியாக நமக்கு வேறு ஒரு பெயர் என்ன கொடுக்க முடியும்? கிரமமாக யோசித்தால் ஆதாரப்படி பார்த்தால் சூத்திரன் என்கிற பெயரைத் தான் கொடுத்தாகவேண்டும். அதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியுமா? ஏனெனில் மதக்கொள்கைப்படி இந்தப் பார்ப்பனர்கள் நம்நாட்டு மக்களுக்கு பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் பஞ்சமர், மிலேச்சர் என்ற பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பிராமணர்கள் என்கிற பெயரை பொறுத்தவரையில் ஒருவிதமான தகராறில்லை. ஏனென்றால் பார்ப்பனர்கள் தங்களை பிராமணரென்று சொல்லிக்கொள்ளுகின்றார்கள்.

### க்ஷத்திரியர்கள்.

க்ஷத்திரியர்கள் என்பதில் அநேக தகராறு ஏற்படுகிறது. யார் யாரை க்ஷத்திரியனென்று கூப்பிடுவது? க்ஷத்திரியன் என்கிற பெயர் யாருக்கு உரிமை உண்டென்று சொல்லமுடியும். க்ஷத்திரியனென்றால் நாட்டை ஆளுபவன், போர்வீரன், காப்பாளன், கத்தி வாளுடன் சமர்க்களத்தில் போர் புரிபவன் என்பதாக பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படி எல்லோரும் க்ஷத்திரியர்கள் தான். ஏதாவது ஒரு காலத்திலாவது நாட்டை ஆளாதார் யாரிருக்கிறார்கள்? பட்டாளத்தில் போர்வீரனுயில்லாதார் யார் இருக்கிறார்கள்? ஒரு காலத்தில் வேளாளர் நாயுடு, வன்னியர், ராஜுக்கள், நாடார்கள், செட்டியார்கள், குயவர்கள், மறவர்கள், தொட்டியர்கள், பார்ப்பனர்கள், ஒட்டர்கள், முகம்மதியர்கள் முதலியவர்கள் அரசாண்டிருக்கிறார்கள். இப்பொழுதும் நம் நாட்டை ஆங்கிலேயர்கள் தான் ஆள்கின்றார்கள். அம்முறைப்படி யாரை க்ஷத்திரியர் என்று கூப்பிடுவது?

ஒரு காலத்தில் அரசாண்டவர்களை க்ஷத்திரியர் என்பதா? அல்லது இப்போது அரசாளுகின்றவர்களை க்ஷத்திரியரென்பதா? ஆளுகிறவனை மாத்திரம் க்ஷத்திரியன் என்பதா, அல்லது அவன் குடும்பத்தை மாத்திரம் க்ஷத்திரியரென்பதா, அல்லது ஆளுகின்ற ஜாதியையே க்ஷத்திரியரென்பதா? இப்படிப் பார்ப்போமானால் ஒன்று உலகத்தில் உள்ள மக்கள் பூராவையும் க்ஷத்திரியர்கள் என்று சொல்லவேண்டும். அல்லது ஜார்ஜ் சக்கரவர்த்தியை மாத்திரம் க்ஷத்திரியன் என்று சொல்லவேண்டும். ஏனெனில் நாம் காணும் ஒவ்வொரு ஜாதியார் என்போர்களும் ஒரு காலத்தில் அரசாண்டதாயிருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பாரும் யுத்தத்தில் சேவை செய்துதானிருக்கிறார்கள்.

### வைசியர்.

அதுதாப்போல் வைசியர் என்றாலோ, வியாபாரம் செய்வோர் வைசியர். ஆகையால் வியாபாரம் செய்வோர் அனைவரும் வைசியர். இக்காலத்தில் எல்லாவகுப்பாரும் வியாபாரம் செய்வதால் யாரை வைசியரென்று சொல்லுவது? இன்னும் விவசாயம் செய்பவர் வைசியர். மாடு மேய்ப்பவர் வைசியர் என்று சொல்லப்படுகிறது. இத்தொழில் எல்லாருமே செய்திருக்கின்றார்கள். செய்கிறார்கள். எனவே யாரை வைசியரென்பது?

### பார்ப்பனர் ஒப்புவார்களா?

தவிரவும் க்ஷத்திரியர் வைசியர் என்கிற பிரிவினைப் பார்ப்பனர்கள் ஒப்புக்கொண்டால் அவர்கள் ஏகபோகமாக அனுபவித்து வருகின்ற உரிமைகளை மூன்று பிரிவாகப்பிரித்து அதில் அவர்கள் ஒன்று எடுத்துக்கொண்டு பாக்கியை க்ஷத்திரியருக்கு ஒன்றும் வைசியருக்கு ஒன்றுமாக பிரி

க்க நேரிட்டுவிடும். ஆதலால் இதற்குப் பயந்துகொண்டே வெகு தந்திரமாய் கலியுகத்தில் உலகத்தில் பிராமணர்கள் சூத்திரர்கள் என்கிற இருபிரிவு தவிர வேறில்லை என்று சொல்லி விட்டார்கள்.

எனவே மதக்கொள்கைப்படி யார் சூத்திரன் என்று பார்த்தால் பிராமணன் வைப்பாட்டிமகன், பரம்பரையாக மேல்சாதியாருக்குத்தொண்டு செய்வதை விட வேறு தொழில் இல்லாதவன் முதலிய யோக்கியதை உடையவன். இந்தப் பெயரை ஏற்றுக்கொள்ள நம் மனம் பொறுக்குமா? தவிர மற்றொரு வகுப்பார்களென்ற பஞ்சமர்களை தீண்டப்படாதவர்கள் சண்டாளர்களென்று பிரித்திருப்பதோடு, வேறு மதத்தினர் என்கின்றவர்களான கிருஸ்தவர்களையும் முகம்மதியர்களையுமாகச் சேர்த்து மிலேச்சர்களென்று பிரித்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம்நான் ஏன் சொல்லநேரிட்டதென்றால் பார்ப்பனரல்லாதார் என்ற பெயர் தவிர வேறு பெயர் வைக்கமுடியாமலிருப்பதற்கு நேரிட்ட காரணத்தை விளக்குவதற்காகத்தான் என்றும் இவ்வித இழிவான பெயர்களையும், கொடுமைகளையும் ஒழிக்கத்தான் அப்பெயர் கொடுக்கப்பட்டது என்றும் காட்டத்தான். தவிர சிலர் ஏன் இவ்வியக்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்கிறார்கள். பார்ப்பனர்களை எப்போதும நம்முடன் சேர்க்கக்கூடாதென்ற கொள்கை இதிலில்லை. அவர்கள் இவ்வித வித்தியாசங்களையும் சூழ்ச்சிகளையும் ஒழித்து சமத்துவத்தை ஒப்புக்கொண்டு நல்லஎண்ணத்துடன் செய்கையில் நடந்து வரும்வரையில் அவர்களை நீக்கிவைக்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அன்றியும் பார்ப்பனருக்கு என்றுமாத்திரம்தான் எங்குபார்த்தாலும்ஒரு தனியிட மேற்படுத்திக் கொண்டு அதில் அவர்கள் ஆதிக்கத்தை உபயோகப்படுத்திக கொள்கிறார்கள். மற்றவர்களுக்கு அவ்வித வித்தியாசம் வேண்டும் என்கிற ஆசை இல்லை. அதோடு பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் இழிந்தவர்கள் என்பதை நமது மக்களின் ரத்தத்திலேயே பாய்ச்சிவிட்டார்கள். எனவே ஒரு சிறு கூட்டத்தாரின் கொடுமையால் பெரிய சமுகம் சுயமரியாதையிழந்து பல கஷ்டநஷ்டங்களுக்காளாகியிருப்பதற்குப் பார்ப்பனரல்லாதாராகிய நாம் காரணஸ்தர்கள் அல்ல. தவிர சிலர் நம்மைப் பார்த்து பார்ப்பனரிடம் துவேஷம் வேண்டாம், பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் கூடி ஒன்று சேர்ந்து இக்கொடுமையை நிவர்த்திக்கவழி பாருங்கள் என்று நல்ல பிள்ளைகள் போல பேசுகிறார்கள்

நாம் அவர்களைத் தொடுவதற்கும், ஒன்றாய் இருப்பதற்கும், உண்பதற்கும் ஒன்று சேர்ந்து கடவுளை வணங்குவதற்கும், தெருவில் நடப்பதற்கும் கூட உரிமை கொடாத அவர்களா அல்லது நடப்பதற்கு வழிவிடுங்கள் என்று கெஞ்சிக் கேட்கின்ற நாமா துவேஷத்தை உண்டாக்குகிறவர்கள் என்பது சற்று யோசிப்பவர்களுக்குத் தோன்றாமல் போகாது. அன்றியும் ஒற்றுமையாயிருக்கு துவேஷத்தை ஒழித்துக்கொள்ளக் கூடாதா என்று சிலர் சொல்லுகின்றார்கள்? துவேஷம் ஒழியவேண்டுமானால் துவேஷத்திற்கு காரணமாயிருப்பவர்களிடம் ஒற்றுமையாயிருக்க முடியவே முடியாது. இன்றையதினம் நான் மாத்திரமல்ல இக்குற்றங்களை எடுத்துக் கண்டிப்பது, ஏறக்குறைய 5000, 6000 வருடங்களுக்கு முன்புள்ள தேச சரித்திரத்தைப் பார்த்தால் நமது முன்னோர் காலத்திலிருந்தே மனிதத்தன்மைக்கு விரோதமானதும், இயற்கைக்கும் சத்தியத்திற்கும் விரோதமானதுமான கொடுமைகளை ஒழித்து சமத்வத்தையும் அன்பையும் உலகின்கண் நிலைநிறுத்த நம்மவர்கள் பாடுபட்டிருப்பது விளங்காமலிராது. 5000 வருடமாக பாடுபட்டும், அதுவும் அன்புடனும் ஒற்றுமையுடனும் பாடுபட்டும் இன்னும் அப்பேய் தாண்டவமாடுமானால் இனியும் எப்படி அன்பாயும் ஒற்றுமையாயுமிருந்து இப்பொல்லாப் பிரிவினைகளை நீக்க முடியும் என்பதை யோசியுங்கள். இவைகளை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் நம் வாலிபர்களிலும் சிலர் "எதற்கு இந்த வித்தியாசம்? பாபம் பார்ப்பனர்கள் நம்மிடம் வருகிறார்கள், பிச்சையெடுக்கிறார்கள், பிறகு போய் விடுகிறார்கள். அவர்கள்மீது நமக்கேன்வெறுப்பு" என்று தர்ம சாஸ்திரம் பேசி நம் இயக்கத்திற்கே முட்டுக்கட்டையாய் நின்றுவிடுகிறார்கள். அவர்களுக்கு நான் மேலே சொல்லி இருக்கும் சமாதானத்தையே சொல்லிக் கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். நம் சொந்தவிடங்களில் எங்கேயாவது இது பார்ப்பனருக்கு இது பார்ப்பனரல்லாதார் என்கிற சூத்திரருக்கு என்று நாம் எழுதி வைத்திருக்கிறோமா? எந்த பொது ஸ்தலத்திலும் எந்த உயர்ந்தவிடத்திலும் எந்த புண்ணிய பூமியிலும் இது பார்ப்பனருக்கு இது சூத்திரருக்கு என்று எழுதி வைத்துக் கொண்டிருப்பதோடல்லாமல் அதை அமுலில் வைத்துக்கொண்டிருப்பது பார்ப்பனர்களா அல்லது நாமா? அன்றியும் இப்போதும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு காப்பி ஓட்டல்களிலும் வெட்டி வைத்த குளக்கரையிலும் இது பார்ப்பனர்களுக்கு, இது சூத்திரருக்கு என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படி எழுதியது தப்பு, இவ்வித வித்தியாசம் இருக்கக்கூடாதென்றால் அது ஒற்றுமைப் பிளவாகுமா? அல்லது ஒற்றுமைக்கான முயற்சி ஆகுமா? ஒற்றுமையை எப்படி உண்டாக்குவது? "நீங்களெல்லாம் ஒற்றுமையா யிருங்கள், இருக்கிற வித்தியாசங்கள் அப்படியே இருக்கட்டும், அது கடவுளால் உண்டாக்கப் பட்டது" என்றால் எப்படி ஒற்றுமை நிலவும்? இதனால் கடவுளே பிரித்து வைத்திருக்கின்றார் என்றல்லவா ஏற்படும உண்மையாய் ஒருவருக்கொருவர் ஒற்றுமையா யிருக்க வேண்டுமானால் ஒவ்வொருவர் எண்ணமும் ஒரே மாதிரியாகவும் ஒவ்வொருவரும் மற்றவரால் சமத்துவமாக மதிக்கப்பட்டும் ஒவ்வொருவருக்கும் அன்னியோன்யமும் அன்பும் நம்பிக்கையும் ஏற்படாலன்றி உண்மையான ஒற்றுமையாய் எப்படி வாழமுடியும்? ஒரு புலியினிடத்தில் ஒரு ஆட்டுக் குட்டியை விட்டு நீங்களிருவரும ஒற்றுமையாயிருங்கள் என்றால் அவைகள் எப்படி ஒற்றுமையாயிருக்க முடியும்?" புலி ஆட்டைக் கொன்று தின்னாமலிருக்க முடியுமா? எலிகளிருக்கு மிடத்து, பூனையைக் கொண்டு வந்துவிட்டு எலிகளைக் கூப்பிட்டு நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாயிருங்களென்றால் அவைகள் எப்படி ஒற்றுமையாய் சேர்ந்து வாழ முடியும்? கொஞ்சகாலத்திற்குள் எலிகளே காணப்படா தொழியுமா அல்லவா?' இரண்டுக்கும் நம்பிக்கையுண்டாக்கி, ஒன்றைக்கொன்று ஒன்று வயிறு வளர்க்க வேண்டியிருக்கிறநிலையை மாற்றாமல், அவைகளை எப்படி ஒற்றுமையாயிருக்கச் செய்ய முடியும்? ஆனால் சிலர் வெகு சுலபமாக நீங்களெல்லாம் ஒற்றுமையாயிருங்கள்; அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி விடுவார்கள். அவர்கள் பொறுப்பை உணராதவர்களே என்றே சொல்லுவேன். பூச்சி புழுக்கள் பன்றி நாய்களைவிட கேவலமாய் நடத்தப்படுவது நாமா? அவர்களா? இப்படி சொல்லுகிறவர்கள் நிமிர்ந்து போட்டதென்ன? குனிந்து எடுத்ததென்ன? வெறும் வாய் வேதாந்தம் பேசுகிறவர்கள் தானே. சுயமரியாதை உணர்ச்சி இல்லாதவர்களுக்கு இதன் கஷ்டம் தோன்றாது (சிரிப்பு) நித்திய வாழ்வில் நாம் படும் துயர் யாரே அறிவர்? தவிர வேறு சிலர் "வேளாளருக்குள்ளும் மற்றும் பல வகுப்பார்க்குள்ளும் இம்மாதிரி ஒருவரை ஒருவர் தொடக்கூடாதென்றும், உண்ணக்கூடாதென்றும், கலியாணம் செய்யக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள். அதை முதலில் ஒழியுங்கள். கீழிருந்து ஒழித்துக்கொண்டு வந்த பிறகு மேலுள்ளவைகளை ஒழிக்க முயலுங்கள்" என்று சொல்லக்கூடும். கீழே காணப்படும் பிரிவினைகள் உண்மையானதல்ல, இது பார்ப்பானைப் பார்த்து அவன் போல் நடக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு அறியாமையால் நடித்து வருகிற வினையின்றி சூழ்ச்சிக்காக வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொண்டதல்ல. (கை தட்டல்) பார்ப்பனருக்கு முன் நம் நாட்டில் இந்தக் கொடுமைகளும் கூடா ஒழுக்கங்களு மிருந்ததாக சொல்ல முடியாது. நான் சிறந்த ஆராய்ச்சிக்காரனுமல்ல, குறைந்த ஆராய்ச்சிக்காரனுமல்ல, அடியோடு ஆராய்ச்சி இல்லாதவன். ஆனாலும் பல ஆராய்ச்சிக்காரர்களை அடுத்து கேட்டதின் பயன் அறிந்தவனேயன்றி வேறல்ல, முதலாவது இந்த சாதி என்னும் சொல்லே தமிழ் சொல்லல்ல, சாதிக்குஆதாரம் இந்து மதம் என்று சொல்லுவது. அந்த இந்துமதம் என்ற சொல்லும் தமிழ் சொல்லல்ல. அதற்கு ஆதாரமாக உள்ள வேதமும் மனு தர்மமும் நமக்கு சம்மந்தப்பட்டவையுமல்ல அவைகள் நம் பாஷையில்உள்ளவையுமல்ல. நம்மக்களால் எழுதியவையுமல்ல. இந்து என்ற சொல் எந்தமொழியிலுமில்லை, எப்படியோ அது நம் தலைக்கு வினையாக வந்து சேர்ந்திருக்கின்றது. ஆராய்ச்சிக்காரர்கள அதை ஒரு நதியின் பெயர் என்கிறார்கள், சிலர், ஒருஇடத்தில் வாழும குறிப்பிட்ட மனிதர்களைக் குறிப்பது என்கிறார்கள் சிலர் பர்சிய பாஷையில் திருடர்களைக் குறிப்பது என்கிறார்கள்' மருவி வந்த

தென்பார்கள் சிலர். மற்றபடி வர்ணாசிரம தர்மம் என்னும் சொல்கூட தமிழ்ச் சொல் அல்ல. நம் நாட்டில் அங்கியமம் இருந்திருந்தால் நம் மொழியில் அதற்கு வார்த்தை இருந்திருக்கும். சோளம் நம் நாட்டில் விளைகிறது. அதை சோளம் என்று சொல்லுகிறோம். ஆங்கிலேயரும் அதை சோளமென்றே சொல்லுவார்கள். ஏன்? அவர்கள் நாட்டில் அது இருந்ததில்லை. அது போலவே காப்பியை நம் தமிழ்மக்கள் ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு ஒரு பானமாக உபயோகிக்கவில்லை. அதனால் நம் தமிழ் மொழியில் அதற்கு ஒரு பெயரிடுவதற்கு இல்லாமல் போயிற்று. ஆதலால் நாமும் அதை அன்னிய நாட்டுப் பெயரால் காப்பி என்றே அழைக்கின்றோம். வர்ணாசிரம தர்ம சாதி பாகுபாடு நம் தமிழ் நாட்டில் ஆரியர்கள் வருவதற்கு முன்பே யிருந்திருந்தால் நம் மொழியில் அவைகளுக்குத் தனிப்பெயரிருந்து தானிருக்கும் அன்றியும் இப்பெயர்களையும் இவ்வித்தியாசங்களையும் நாம் ஆதியில் இருந்தே கண்டித்து வந்திருக்கின்றோம் என்பதற்கு அறிகுறிதான் ஆரியர்களை நம் மிலேச்சர்கள் என்று சொல்லுவது. எனவே இவைகள் ஒழியவேண்டுமானால் இவ்வாரியத்தன்மை ஒழிய வேண்டும்; ஆரியமதம் ஒழியவேண்டும்; ஆரியக்கொள்கை ஒழிய வேண்டும்.

அப்படிக்கின்றி அவைகளை ஒழிக்காமல் அவைகளுக்கு மகாத்மாவைப்போல் சவுகரியத்திற்கும் சமயத்திற்கும் தகுந்தபடி வியாக்யானங்கள் செய்து கொண்டிருப்பதினால் ஒரு அணுவளவு பயனும் உண்டாகாது. அடிக்கடி சறுக்கி விட்டு ஆரியமாய்கையில் விழ வேண்டியதாய்த்தான் விடும். அதனால் தான் இவ்வளவு ஆயிர வருஷம் பாடுபட்டும் இன்னமும் அந்த அடிமை நிலையில் நமது நாடு இருந்து வருகின்றது. தவிர சிலர் சொல்லுவது போல் கீழே இருந்து இவ்வித்தியாசங்களைப் போக்கிக் கொண்டுபோக வேண்டுமென்பது ஒருகாலத்திலும் முடியும்படியான காரியமல்ல அதற்கு ஆதாரமானதாகிய வேரிலிருந்து பறித்து வெட்டியிருந்தால் தான் மறுபடி முளைக்காமலிருக்கும். அப்படிக்கில்லாமல் அதிலிருந்து முளைத்த கிளைகளை மாத்திரம் வெட்டினால் மறுபடியும் அது நன்றாய் துளிர்த்து தழைந்து கொண்டு தானிருக்கும். எனவே உற்பத்தி ஸ்தானமான பார்ப்பனர்களிடமிருந்து அதை ஒழிக்கவேண்டும. அவர்களால் தான் இவ்வித்தியாசங்கள் பரவுகின்றன. உதாரணமாக, எங்கள் வீட்டிற்கு முன் ஒரு குழாய் இருக்கிறது. அதில் தண்ணீர் பிடிக்க ஒரு பார்ப்பன சகோதரி வரும்போது ஒரு சுண்டைக்காய் பிரமாணம் புளியும் பஞ்சபாத்திரத்தில் தண்ணீரும் கொண்டுவந்து குழாயை புளியால் விளக்கி கழுவி பின்பு தண்ணீர் பிடித்துக் கொண்டு போக ஆரம்பிக்கிறாள். இதைப்பார்த்த நம் சகோதரிகள் நெல்லிக்காய் அவ்வளவு புளியும் ஒரு தோண்டி தண்ணீரும் கொண்டுவந்து புளியால் விளக்கி கழுவி தண்ணீர் எடுத்துக் கொண்டுபோக பழகுகிறார்கள். இதைக் கண்ணுற்ற நம் முகம்மதிய சகோதரிகளும கொளுமிச்சங்காய் அளவு புளியும் முக்கால் குடம் தண்ணீரும் கொண்டு வந்து புளியால் குழாயை விளக்கி கழுவி தண்ணீர் பிடித்து எடுத்துக்கொண்டு போகப் பழகுகிறார்கள். அந்த முகம்மதிய சகோதரியை அடுத்து "உங்கள் மதத்திற்கு வித்தியாசம் இல்லையே நீங்கள் கூட ஏன் இப்படி கழுவித் தண்ணீர் பிடிக்கிறீர்கள்" என்றால் "எனக்கு என்ன தெரியும் இப்படித்தான் தண்ணீர் பிடிப்பது வழக்கமோ என்னமோ என்று கருதி நான் செய்துவருகிறேன்" என்கிறாள். இவ்வளவுக்கும் காரணமாயிருந்தவர்கள் யார் என்று பாருங்கள். பார்ப்பனர்கள் இப்படிச் செய்யாதிருந்தால் இவ்வித வழக்கங்கள் பரவ வழியில்லை.

அவர்கள் போட்ட முடிச்சு அவர்கள் தான் அவிழ்க்க வேண்டும் என்று விவேகானந்த சுவாமி சொல்லியிருக்கின்றார். நம்மக்களில் சிலர் அல்லாதார் என்ற பெயர் ஏன் என்பார்கள். அதற்கும் சமாதானம் சொல்லவேண்டி இருக்கிறது. ஆண்டி காலராமருந்தென்றால் அம்மருந்து எப்படி காலராவந்த உடன் நினைவுக்கு வருமோ, ஆண்டி பிளேக்மருந்தென்றால் பிளேக்கு வந்தவுடன் நினைவுக்குவருமோ, மூட்டை பூச்சிக்கு எமன் என்றால் எப்படி மூட்டைப்பூச்சி கடித்தவுடன் அம்மருந்து நினைவிருக்குமோ அதுபோல் சமத்துவமில்லாமல் கொடுமையில் பட்டு இழிவை அநுபவித்துவரும் மக்களுக்கு அது ஒழியவேண்டுமானால் அதற்கு ஆதாரமானவர்கள் பெயரும் அவர்களைக்கண்ட அளவில் நினைவிருக்க வேண்டும். கொடுமை செய்த விதமும் ஞாபகத்திற்கு உடனே வரவேண்டுமெனக் கருதியே பார்ப்பனரல்லாதார் இயக்கமெனப் பெயர் கொடுக்கப்பட்டதேயன்றி வேறல்ல. இவ்வித இழிவும் கொடுமையும் ஒழிந்து எல்லாமக்களும் சமத்துவம் அடைந்து நம் ஒற்றுமைப்பட்டால் இவ் அல்லாதார் என்ற பெயர் தானாக இல்லாமலே போகும். அரசியலிலும் கூட அல்லாதாரென்கிற பெயரை நீக்கி நாம வாழ முடியவில்லை அது அவமானமில்லை என்றுதான் கருதியிருக்கிறோம். அரசியல் சீர்திருத்தமென்பதில் தேர்தல்களுக்குக் கிருஸ்தவர்கள், கிருஸ்தவர்கள் தொகுதியில் நிற்கிறார்கள். ஆனால் நாம் மாத்திரம் முகம்மதியா அல்லாதாரென்ற தொகுதிக்கு மாத்திரம், முகம்மதியர் அல்லாதார் என்ற தொகுதிக்கு நின்றுதான் இப்பொழுதும சட்டசபை அங்கத்தினராகவும் நாம முகம்மதியர் அல்லாதார் தொகுதியில் ஓட்டர்களாகவும் இருந்து வருகிறோம. அரசாங்கத்தாருக்கும் இதைத்தவிர வேறு பெயர் கிடைக்கவில்லை: நமக்கும சொல்லத் தெரியவில்லை

இந்து மத பரிபாலன சட்டம கொண்டு வந்த காலத்தில் இந்தப் பார்ப்பனர்கள் இந்து மதம போயிற்றென்று சொன்னார்களே ஒழிய தங்களுக்கும மகமதியரல்லாதார் என்கிற பெயர் வேண்டாம் என்று சொல்லவே இல்லை. ஏன் என்றால் வேறு பெயர் சொல்வதற்கு இல்லை. இருந்திருந்தால் வாதாடிப் பார்த்திருப்பார்கள், இவைகளெல்லாம எதற்காக சொல்லுகிறேனென்றால் நமது எதிரிகள் நம் இயக்கத்தைக்கெடுக்க சில்லரை விஷயத்தைச் சொல்லி மக்களை எவ்வளவு தூரம் ஏமாற்றுகிறார்களென்பதை தெளிவு படுத்தவேயன்றி வேறல்ல. எந்தப் புராணத்திலும் எந்தச் சரித்திரத்திலும் இந்து மதம் என்பதைப் பற்றி எங்கும் ஒரு வரி கூட சொல்லவில்லை. ஆங்கில அரசாங்கமுள்ள இந்த நாளில் தான் இந்து என்ற பெயர் ரயில்வே பிளாட்பாரத்திலுள்ள ஓட்டல்களில் இந்து பிரயாணிகளென்றும், வெளிக்குப்போக உள்ள இடங்களில் இந்து புருஷர்கள் இந்து பெண்கள் என்றும எழுதியதைக் காணலாமேயன்றி வேறு எங்கும் காணமுடியாது. ஆகையால் இச்சங்கத்திற்குப் பார்ப்பனரல்லாத வாலிப சங்கமென்று பெயர் வைத்துக்கொண்டதில் சிறிதும் பிழை இல்லை. அநேகர் குற்றம் கூறினாலும் சமாதானம் சொல்லுவதற்கு வேண்டிய சாதனங்களிருப்பதால் நாம் ஒரு சிறிதும் அதற்காக பயப்படாது நம் காரியத்தைச் செவ்வனே செய்துவரல் வேண்டும்.


## பார்ப்பனரல்லாத வாலிபர்கள் செய்யவேண்டுவன

நீங்கள் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி சிறிது சொல்லுகிறேன். நாம் சத்தியத்தின் பெயரால் பல இடையூறுகளை வேருடன் களைந்தெறியும்வரை பார்ப்பனரல்லாத வாலிபர்கள் கண்டிப்பாய் அரசியலில் ஒருபோதும் தலையிடுதல் கூடாது. அரசியலில் தலையிட ஒரு பக்குவமுண்டு. அந்த பக்குவம் உங்களுக்கும் இந்த நாட்டுக்கும் வந்தபின்பு அரசியலில் தலையிட்டால் பயன்படும் நமக்கும் அரசியலுக்கும் இப்பொழுது பொருத்தமும் கவனமும் இருக்கக்கூடாது. நாம அனைவரும் பொதுவாழ்வில் சமசுதந்திரமும் பிறவியில் நமது வாழ்வும் ஒக்கமும அனைவருடைய வாழ்வும் ஒக்கமாகும் என்றும் பிறவியில் உயர்ந்தவருமில்லை இழிந்தவருமில்லை என்றும் உணர்ச்சி உண்டாகும்வரையில் அரசியலில் தலையிடுதல் கூடாது. அப்படி தலையிட்டால் அது தற்கொலையாகவே முடியும்.

## அன்னியா.

மக்களுக்கு அன்னியர் ஆளுவது என்பது கஷ்டமாகத்தானிருக்கும். அந்த ஆட்சியை வாங்கி நாம ஆளவேண்டுமென்ற எண்ணங்கள் சாதாரணமாக உண்டாவது இயல்புதான். அன்னியர் என்பவர் யார்? நாம் என்று சொல்லிக்கொள்பவர் யார்? என்று ஆராயப்புகின், அன்னியர் வெள்ளைக்காரரென்றும், நாமென்பது பிராமணர், சூத்திரர், பஞ்சமர், கிறிஸ்தவர், முகம்மதியா மற்றும் பல சாதியாரும் என்று எண்ணியிருக்கின்றோம். பிராமணனை நம்மவர்கள் என்பதில் சேர்க்கும்போது, வெள்ளைக்காரர்களை மாத்திரம் எப்படி அன்னியர் என்று சொல்லக்கூடும்? பார்ப்பனனைவிட வெள்ளைக்காரன் நமக்கென்ன கொடுமை செய்கிறான்? வெள்ளைக்காரன் நமக்கு செய்துவரும் கொடுமைகள் என்பதெல்லாம் பார்ப்பனன் யோசனைகேட்டுப் பார்ப்பனன் சொல்லுகிறபடி பார்ப்பனன் உதவியால் அவன் சம்மதத்தின்பேரில் செய்கிறானா, தானாகவே செய்கிறானா? தவிர வெள்ளைக்காரன் நீங்கிய மற்

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ ஐப்பசி 14உ

## வருணாசிரம மகாநாடு.

காங்கிரசின்போது காங்கிரசுப் பந்தலில் வருணாசிரம மகாநாடு என்பதாக ஒரு மகாநாடு நடக்கப்போவதாய் பல பத்திரிகைகளில் தெரியவருகின்றது.

வருணாசிரம மகாநாடு என்பது என்ன என்று நாம் மக்களுக்கு விளக்கவேண்டியதில்லை. ஆனாலும் சிறிது குறிப்பிடுவோம். என்னவெனில், உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் 6 வருணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அதாவது:—

1. பிராமணன். 2. க்ஷத்திரியன். 3. வைசியன். 4. சூத்திரன். 5. பஞ்சமன். 6. மிலேச்சன்.

என்பதாக பிரிக்கப் பட்டிருக்கின்றது என்றும், அதில் பிராமணன் உயர்ந்தவன் குருவாயிருக்கத் தக்கவன், க்ஷத்திரியன் அதைவிட தாழ்ந்தவன் அரசனாயிருக்கத் தக்கவன், வைசியன் அதைவிட தாழ்ந்தவன் வியாபாரியாய் இருக்கத் தகுந்தவன், சூத்திரன் அதைவிட தாழ்ந்தவன் மேல்கண்ட மூவருக்கும் அடிமையாயிருக்கவேண்டியதோடு சிறப்பாக பிராமணர்களுக்கு அடிமையாகவும் இருப்பதுடன் சூத்திரனது பெண்களும் பொருள்களும் பிராமணர்களுக்கே உரியது என்றும், கொடுக்காவிட்டால் பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாம் என்றும், அவர் படிக்கவும் கடவுளை நெருங்கி வணங்கவும் உரிமையற்றவன் என்கின்றதுமான கொள்கையை கொண்டது. ஆதிதிராவிடர், ஆதி சூத்திரர், அவர்ணஸ்தர், நாம சூத்திரர் என்பதான கோடிக்கணக்கான மக்கள் பஞ்சமர், அதாவது காணவும் நெருங்கவும் நிழல் மேலே படவும், பேசவும், வழியில் நடக்கவும், கோயில் என்பதில் நுழையவும், கடவுள் என்பதை தரிசிக்கவும் உரிமை யில்லாததான கொள்கையைக் கொண்டது

மிலேச்சர்கள் என்பது மகமதியர் கிருஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் என்போர்கள் அல்லாதவர்களையும் சமஸ்கிருதம் தவிர மற்ற பாஷை பேசுகின்றவர்களையும் குறியாய்க் கொண்டது இந்து சாஸ்திரங்கள் மத தத்துவங்கள் என்பவைகளின்படி பஞ்சமர் மிலேச்சர் என்பதற்கு ஆதாரமில்லாவிட்டாலும், பார்ப்பன செல்வாக்காலும் அவர்களினது அவசியத்தாலும் இவ்விரண்டு வகுப்புகளும் ஏற்பட்டுபழக்கத்திற்கும் எப்படியோ ஆதியில் கொண்டுவந்துவிடப்பட்டுவிட்டது. ஆனால் இப்போது இவைகளுக்கு பல தகராறுகள் ஏற்படுவதால் ஆறுவருணத்தையும் இரண்டுவருணமாக்கி, அதாவது கலியுகத்தில் பிராமணன், சூத்திரன் என்னும் இரண்டைத் தவிர வேறு வருணம் இல்லை என்பதாக முடிவு கட்டி அதையே மத தத்துவமாகவும் ஆக்கிவிட்டார்கள். ஆனாலும் இப்பார்ப்பனர் பேச்சை நம்பி ஆதியில் பூணூல் போட்டுக் கொண்ட பலர் தங்களை பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் என்று கொண்டிருந்தவர்கள் இப்போது தகரார் செய்ய வருவதால், அதற்கு அவர்கள் ஏமாறும்படி சமயத்திற்கு ஏற்ற தந்திரங்கள் செய்து நமது பார்ப்பனர்கள் தப்பித்து வருகிறார்கள். இது எப்படி இருந்தாலும் ஸ்ரீமான் காந்தி அவர்களாலேயே இந்த வருணாசிரம அடிப்படைத்தத்துவமும் கொள்கையும் ஒப்புக்கொண்டாய் விட்டது. அதாவது பார்ப்பனர்களுக்கும் ஸ்ரீ காந்திக்கும் வருணம் நான்கு என்பதிலும், அவைகளுக்கு பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நான்கு தொழில்கள் உண்டு என்பதிலும், அதுவும் பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே பிறவியில் பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் ஏற்படுகிறான் என்பதிலும் யாதொரு அபிப்பிராயபேதமுமில்லை. ஆனால் வருணம் ஆறு அல்லது நான்கா அல்லது இரண்டா என்பது தான் இப்போது ஸ்ரீ காந்திக்கும் பார்ப்பனருக்கும் சண்டை. பார்ப்பனர்கள் இரண்டு வருணம் தான், அதாவது பிராமணன் சூத்திரன் என்பதாக சொல்லுகிறார்கள். ஸ்ரீ காந்தி நாலு என்கின்றார். இந்த வாதில் நமக்கு எவ்வித லாபமும் இல்லை. ஏனெனில் பார்ப்பனர்கள் கொள்கைப்படியும் ஸ்ரீ காந்தி அவர்கள் கொள்கைப்படியும் நாம் சூத்திரர்களில் தான் சேர்க்கப்படுகின்றோமே ஒழிய வேறில்லை. சூத்திரனின் தர்மம் பார்ப்பானுக்கு வேலை செய்யவேண்டியது. இதுபிறப்புரிமை என்று இருவரும் சொல்லுகின்றார்கள் ஆதலால் இம்மாதிரி கொடுமையுள்ளதும் அயோக்கியத்தனமானதுமான ஒரு கொள்கை கொண்ட வருணாசிரம தர்மம் என்பதாக ஒரு மகாநாடு நடப்பதை எப்படிப் பொது மக்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்கள் என்று பார்ப்பனர்கள் நினைத்திருக்கின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

உலகத்தில் இதுசமயம் எழுந்து இருக்கும் சுயமரியாதை உணர்ச்சியைப் பார்த்த பிறகும் சர்க்கார் எப்படி இவ்வித போக்கிரித்தனங்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டு வருகிறார்களென்பதும் நமக்கு விளங்கவில்லை. சாதாரணமாக ரங்கிலாரசூல என்று மகமதிய மத தலைவராகிய ஸ்ரீமான் மகமது நபி அவர்கள் விபசாரம் செய்தார் என்கிற கருத்துடன் கொண்ட — துண்டு விளம்பரம் [illegible] ...ற்றாக பல விவகாரங்களும் சண்டைகளும் [illegible] நடந்து வருவதுடன் ஏகா[illegible] பெரிய சமயத்தலைவர்களை [illegible] [illegible] [illegible] [illegible] கொலைசெய்யக் [illegible]

## தேவதாசி விண்ணப்பம்.

நமது நாட்டில் தெய்வத்தின் பேராலும் மதத்தின் பேராலும் விபசாரித்தனத்திற்கு இடமாயிருக்கிற தேவதாசிகள் என்கிற தத்துவம் எடுபடவேண்டுமென்பதாக பலர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக சென்னை சட்ட சபை அங்கத்தினரும் உபதலைவருமான ஸ்ரீமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சென்னை சட்ட சபையில் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதன் தத்துவம் என்னவென்றால் விபசாரத்திற்காக மதத்தின் பேரால் கோவிலில் பெண்களுக்கு பொட்டுக்கட்டி (முத்திரைபோட்டு) விடும் வழக்கம்கூடாதென்றும், அப்படிச்செய்தால் அதற்கு இன்ன தண்டனை என்று ஏற்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த சட்டம் கூடாது என்பதாக இரண்டு தேவதாசிப் பெண்கள் அதாவது ஸ்ரீமதிகள் துரைக்கண்ணு, பார்வதி, என்கின்ற இரு சகோதரிகளால் சட்ட சபை மெம்பர்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப் பட்டிருக்கின்றனவாம். இதைப் பற்றி நமக்கு யாதொரு ஆச்சரியமுமில்லை. ஏனெனில்இந்த விண்ணப்பம் அச்சகோதரிகளால் அனுப்பப்பட்டிருக்காது என்பதும், அதற்குப்பின்புறம் சிலரிருந்துகொண்டு வேலை செய்திருப்பார்கள் என்பதும், நாம் மனப்பூர்வமாய் தீர்மானிக்கக்கூடியதாயிருக்கிறது. ஏனெனில் அப்பெண்மணிகளுக்கு அவ்வேலை நின்றுபோனால் பிழைக்க முடியாது என்றாவது அப்

---

சந்தேகப்படும்படியான காரியங்கள் நடந்து வருகின்ற இக்காலத்தில் ஒரு பெரிய சமூகத்தையே ஒரு சிறு கூட்டந்தாராகிய சோமபேறிகள் தங்களுக்குபிறவி அடிமைகள் என்றும், அவர்களது பெண்கள் எல்லாம்தங்களுக்கு வைப்பாட்டிகள் என்றும், அவர்கள்பேசுவது மிலேச்ச பாஷை என்றும், அவர்களது சொத்துக்கள் எல்லாம தாங்கள் பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாமென்றும், இனியும் என்ன என்னமோ இழிவுக்கொள்கைகள் கொண்டதான ஒரு விஷயத்தை நிலைநிறுத்த ஒரு மகாநாடு கூட்டினால் மக்கள் எந்தவிதத்தில் பொறுமையோடு இருப்பார்கள் என்று நமது சர்க்காரார் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது நமக்கு விளங்கவில்லை. எப்படியாவது கலகத்திற்கும் அடிதடி சண்டைக்கும் இடம்கொடுத்து கொலைகள் நடக்கின்ற தருணம் வந்தால் தான் தங்கள் அக்கிரம ஆட்சி நடைபெறசவுகரியம் ஏற்படும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தான்நினைக்கவேண்டியிருக்கிறது.

## ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஈரோட்டிற்கு வந்திருக்கின்றார். ஒரு வாரம் ஈரோட்டில் தாமதிப்பார். நவம்பர் 6-ஆம் தேதி மன்னார்குடிக்குப் போவார். பின் 4-நாள் தஞ்சை ஜில்லாவில் ஸ்ரீமான்கள் நாயக்கர், சின்னையா பிள்ளை முதலியவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யக்கூடும்.

பெண்மணிகளால்தான் உலகத்திலுள்ள மற்ற பெண்களுக்கு கற்புகெடாமலிருக்கின்றது என்றாவது இச்சட்டத்தால் உலகம் முழுகிப் போகுமென்றாவது நாம் நினைக்கமுடியாது. ஆனால் அப்பெண்களுக்கு தாதர்களாயிருந்து நோகாமல் ஒரு சொட்டு வேர்வைகூட நிலத்தில் விழாமல் மேலாமினுக்காய் இருந்து வாழ்ந்துவரும் மர்மாக்கள் என்று சொல்லுகின்றவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கொருவழி கிடைப்பது சற்று கஷ்டமாயிருக்கும். ஆதலால் அவர்கள் இந்த விண்ணப்பத்திற்கு மூல கர்த்தாக்களாயிருப்பதில் நமக்கு ஆச்சரியமில்லை. எனினும் இக்கூட்டத்தார் பிழைப்பதற்காக நமது சகோதரிகள் நாட்டுக்கும் சமூகத்திற்கும் இழிவான வேலைகள் செய்துகொண்டிருக்க மதத்தின் பேரால் இடம் கொடுப்பதைவிட அதர்மமானதும் கொடுமையானதுமான காரியம் வேறில்லை.

தவிர மற்றும் சில பெரியோர்கள் நாட்டின் நற்பெயரையும் நமது மற்றப் பெண்களின் கற்பையும் காப்பதை உத்தேசித்து இம்மாதிரி ஒரு கூட்டம் பெண்கள் விபசாரத்திற்கென்றே தனியாயிருக்க வேண்டும் என்று சொல்லுகின்றார்களாம். இந்தக் கொள்கையைப் பற்றி நாம் விவகாரம் பின்னால் செய்துகொள்ள நினைக்கின்றோம். ஆனால் அப்படி ஒரு கூட்டம் பெண்கள் வேண்டும் என்கிற கூற்றை நியாயமென்று கொள்வதாகவே வைத்துக் கொண்டாலும் அதற்காக ஒரு வகுப்பாரே தலைமுறை தலைமுறையாக தங்கள் பெண்களை உதவிவர வேண்டும் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது? என்று கேட்பதுடன் அந்த தேசாபிமானமும் நாட்டின் கற்பு அபிமானமும் கொண்டவர்கள் இந்தப் பரோபகாரம் எல்லா வகுப்புக்கும் முறைப்படி வரட்டும் என்பதாக தாராள நோக்கத்துடன் பார்த்து அதை மற்ற வகுப்புக்கும் பிரித்து விடுவதில் என்ன ஆக்ஷேபணை. அல்லது கட்டுகற்பில் கவலையுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு பெண்ணை இந்த தேசாபிமானத்திற்கும் கற்பு அபிமானத்திற்கும் விட ஒரு சட்டம் செய்வதற்கு என்ன ஆக்ஷேபனை என்று கேட்கின்றோம். இப்படிப்பட்ட தர்ம நியாயங்கள் சொல்லி ஏமாற்றித்தானே ஆதியில் ஒரு வகுப்பார் தலையில் இவ்விழிவு காரியங்கள் போய் விழுந்து விட்டன.

தவிரவும், இவர்கள் இப்படிச் சொல்லுவதிலிருந்து மற்ற பெண்கள் கற்பு தவறுவதற்கு ஆண்களே காரணம் என்றும் அந்த ஆண்களுக்கு வேறு பெண்கள் தயாராயிருந்துவிட்டால் மற்ற பெண்கள் கற்பு கெடாது என்றும் கருதுவதாகவும் தெரிகின்றது. இப்படி சொல்லுவதானது ஆண் சமூகத்திற்கே கொடுமை செய்ததாகும். சட்டமும் சாஸ்திரமும் மதமும் எப்படி இருந்தாலும் இயற்கைத் தத்துவமும் கடவுள் சித்தமும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இவ்விஷயத்தில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்பது நமது அபிப்பிராயம். ஆனாலும் பெண்களுக்கு காவலும் கட்டுப்பாடும் நிபந்தனையும் அதிகமாயிருப்பதால் அவர்கள் விஷயத்தில் நாம் அதிக யோக்கியதை கொடுத்துவிட்டிருக்கிறது. கட்டுப்பாட்டால் காப்பாற்றப்படும் கற்பை கற்பு என்று நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. இவ்விஷயத்தில் உலகத்தில் உள்ள எல்லா மதமும் பழக்கத்தில் அநியாயமாகத்தான் நடந்து கொள்ளுகின்றது. ஆனால் இம்முறைகள் இனி அதிககாலத்திற்கு நிலைக்காது ... நிலைக்கும் வரை ஆண் ... சரிசமமான ... நமது அபிப்பிராயம்.

---

## சென்னையில் பார்ப்பனரல்லாத வாலிபர் மகா நாடு.

சென்ற வாரம் 22, 23-ம் தேதிகளாகிய சனி ஞாயிற்றுகிழமைகளில் சென்னை பீபிள்ஸ் பார்க் என்கிற மைதானத்தில் அமைக்கப்பட்ட நாயர் பந்தல் என்கின்ற ஒரு அழகிய பெருங்கொட்டகையில் பார்ப்பனரல்லாத வாலிபர்களின் முதலாவது மாகாண மகாநாடு பெங்களூர் சட்ட சபை மெம்பரும் முனிசிபல் சேர்மனுமான ஜனாப் மகமத் அப்பாஸ்கான் சாஹேப் அவர்கள் தலைமையில் நடந்தது. சுமார் ஆண் பெண் உள்பட 5000 ஜனங்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். அவ்வாலிப சங்கத்தலைவரும் மகாநாட்டின் வரவேற்புத் தலைவருமான ஸ்ரீமான் ஆரியா அவர்கள் வரவேற்பு உபன்யாசமும், தலைவரின் அக்கிராசன உபந்யாசமும், வாலிப சங்கத்தின் ஆரம்பத்தைப்பற்றியும் அதன் அவசியத்தைப்பற்றியும் பார்ப்பனரல்லாத வாலிபர்களும் பெரியோர்களும் இனி நடந்துகொள்ள வேண்டியதைப் பற்றியும் தெளிவாய் எடுத்துச்சொல்லி இருக்கின்றன. அவற்றை ஒவ்வொருவரும் கவனித்துப்படிக்க வேண்டியது அவசியம். தவிர இம்மகா நாடானது அளவுக்குமேல் வெகு விமரிசையாகவும் அதி ஊக்கமாகவும் மிகதாராள நோக்கத்துடனும் நடைபெற்றதானது நமது நாடு விழித்துக்கொண்டதென்பதையே காட்டுகிறது. அதில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் உலகத்தையே மூடநம்பிக்கையிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை செய்யத்தகுந்த அவ்வளவு சக்தி அடங்கியவைகளாகவே இருந்தன. உதாரணமாக மனுதர்மசாஸ்திரத்தையும் அதை ஆதாரமாகக்கொண்ட புராணங்களையும் அரசாங்கத்தார் பறிமுதல் செய்யவேண்டும் என்று செய்த தீர்மானமும், சூத்திரன் என்று கூப்பிட்டால் பினல் கோட் சட்டப்படி கடுங்காவல் தண்டனையும் கசையடியும் கொடுக்கவேண்டும் என்று பேசிய பேச்சும், பார்ப்பனர்களின் சூழ்ச்சியை எல்லோரும் அறிந்துவிட்டார்கள் என்பதையே வெளியாக்குகிறது. அன்றியும் குடும்பச் சொத்துக்களில் ஆண்களுக்கு உள்ளது போலவே பெண்களுக்கும் சம உரிமை இருக்க வேண்டும் என்று செய்த தீர்மானமும் விதவைகளான பெண்களுக்கும் குடும்ப சொத்தில் தங்கள் புருஷர்கள் இருக்கும் போது அனுபவித்து வந்த வாழ்க்கையை யே அளிக்கவேண்டுமே அல்லாமல் ஜீவனாம்சம் என்பதாகச் சொல்லிக்கொண்டு வக்கீல் வீடுகளிலும் கோர்ட்டுகளிலும் அலையாதிருக்கச் செய்யவேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும் என்பவைகளாகிய பல தீர்மானங்களும், சுயமரியாதைக்காகச் செய்யப்படும் சத்தியாக்கிரகங்களிலும் அதை ஆதரிப்பதுடன் அதில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும் என்று செய்த தீர்மானமும் இவைகளில் காட்டிய உற்சாகமும் தமிழ் நாட்டின் சுயமரியாதை உணர்ச்சிக்கு வீரம் எழுந்துவிட்டதென்பதையே காட்டுகின்றன. இவ்வாலிப சங்கமானது இத்தீர்மானங்களுடன் திருப்தி அடைந்துவிடாமல் இவை அமுலுக்கு வரத்தகுந்த அளவு வேலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம். இரண்டு மாதங்களுக்கு முன் பம்பாய் வாலிப மகாநாட்டிலும் ஏறக்குறைய இது போன்ற தீர்மானங்களே நிறைவேறி இருக்கின்றன. ஒரு நாடு விடுதலையடைய வேண்டுமானால் அந்நாட்டு வாலிபர்களுக்கு விடுதலை உணர்ச்சி வரவேண்டும் என்கின்ற ஆப்தவாக்கின் படியே நமது நாட்டுக்கு இப்போது விடுதலை அறிகுறிகள் காணப்படுகின்றதும், அத்துடன் பால்யைகளும் முனைந்து முன் இருக்கின்றதானது இம்மகாநாட்டால் அறியலாம். ஸ்ரீமதிகள் கிருஷ்ணாபாய் B. A. L. T. C V, நாயகம் B A, பாரிஜாதம் B. A, இந்திராணி பாலசுப்ரமணியம் ஸ்கவுட் மாஸ்டர், அலமேலுமங்கத்தாயாரம்மாள் முதலிய ஸ்திரீ ரத்தினங்களின் சொற்பொழிவுகள் முன் காலத்தில் தமிழ் நாட்டுச்சரித்திரத்தில் காணப்படும் வீரத்தாய்மார்களையெல்லாம் உறுதிப்படுத்தியது. எனவே வாலிப சங்கத்தையும் இம்மகா நாட்டையும் அதன் நிர்வாகிகளையும் அதற்கு ஆதரவளித்த பெரியோர்களையும் நாம் மனப்பூர்வமாய் பாராட்டுவதுடன் நமது கொள்கைக்குப்பின் பலமாயிருப்பதற்கு நமது நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

## சூத்திரன்.

சூத்திரன் என்கிற வார்த்தையானது இழிவான அர்த்தத்தைக்கொண்டு வஞ்சனையாக ஏற்படுத்தப்பட்டதென்றும், அது பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் பார்ப்பன ஆதிக்கத்திற்காக உண்டாக்கப்பட்டதென்றும், அவ்வார்த்தை நமது நாட்டில் எந்த விதத்திலும் நமது தலையில் இருக்கக்கூடாது என்றும் கிளர்ச்சி செய்து அதில் ஒருவிதமான வெற்றிகுறி காணப்படுகிற காலத்தில் சர்க்காரரே சூத்திரன் என்கிற பதத்தை உபயோகித்து வருகின்றார்கள் என்றால் இந்த சர்க்காருக்கு கடுகளவாவது மக்களின் யோக்கியமான உணர்ச்சியில் கவலை இருப்பதாக யாராவது எண்ணக்கூடுமா? பார்ப்பனர்களே இப்போது சூத்திரன் என்று சொல்லப்பயப்படுகிறார்கள். அவர்கள் எழுதிக்கட்டித்தொங்கவிட்டிருந்த போர்டு பலகைகளையெல்லாம் அவிழ்த்தெறிகின்றார்கள். வாழ்க்கையில் இப்போது சூத்திரன் என்கிற சப்தம் பார்ப்பன பெண்களிடையும் கோமட்டி செட்டியார்கள் என்கிற ஒரு வகுப்புப் பெண்களிடையும் தான் இப்போது

## ஸ்ரீமான் காந்தி.

ஸ்ரீமான் காந்தி அவர்களுக்கு இப்போது அழைப்புமேல் அழைப்பு வரத்தொடங்கி விட்டது. ஒவ்வொரு ஊர் ராஜாக்களும் வரவேற்கிறார்கள். ரயில்வே வியாபாரிகள் போன்ற ஐரோப்பியர்கள் எல்லோரும் வரவேற்கிறார்கள். சர்க்கார் அதிகாரிகள் வரவேற்கிறார்கள். ராஜப் பிரதிநிதி வரவேற்கிறார், அழைக்கிறார். நமது நாட்டுப் பார்ப்பனர்களும் தாசானுதாசராய் இருக்கிறார்கள். ஆகவே அவர் அவ்வளவு தூரம் ஐரோப்பிய அரசாங்கத்திற்கும், ஐரோப்பிய வியாபாரிகளுக்கும், பார்ப்பனர்களுக்கும் பரமானந்த சாதுவாக ஆகிவிட்டார் என்பது நன்றாய் விளங்குகின்றது. இப்படி ஐரோப்பியருக்கும், பார்ப்பனருக்கும் பரமானந்த சாதுவாயும் வரவேற்றுக்கொண்டாடத்தக்கவராகவும் ஒருவர் இருந்தால் அவரால் நாட்டுக்கு என்னவிதமான நன்மை விளையக்கூடும்? மேல்கொண்டு இக்கூட்டத்தாரால் நசுக்குண்டு வாழும் கோடிக்கணக்கான ஐரோப்பியரல்லாத—பார்ப்பனரல்லாத ஏழை மக்களுக்கு என்னபலன் உண்டாகக்கூடும்? ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு அரிசி பதம் பார்த்தால் போதுமே அல்லவா!

---

உச்சரிக்கப்பட்டு வருகின்றது. மற்ற இடங்களில் நாளுக்கு நாள் மறைந்து கொண்டே போகின்றது. அப்படி இருக்க சர்க்காரில், அதுவும் ஒரு பார்ப்பனரல்லாதாராகிய ஒருவரின் ஆதிக்கத்தில் உள்ள இலாகாவில், அதுவும் நமக்கே முழு அதிகாரமும் கொடுத்திருப்பதாகப் பிரித்து விடப்பட்டதான மாற்றப்பட்ட இலாகாவாகிய ஸ்தலஸ்தாபன இலாகாவில், அதுவும் ஜாதி வித்தியாசமில்லை பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்கிற கொள்கையை உடையவரும் அதை அமுலில் காட்டும் முகத்தால் ஒரு பார்ப்பன பெண்மணியை மணந்தவருமான ஸ்ரீமான் டாக்டர் சுப்பராயன் அவர்களின் ஏகபோக ஆட்சியின் உள்ள இலாகாவில், பிராமணன், க்ஷத்திரியன், விஸ்வப் பிராமணன், சவுராஷ்டிர பிராமணன், வைசியன், சூத்திரன், ஆதிதிராவிடன் ஒதுக்கப்பட்டவன், பிற்பட்டவன் என்று கலம் போட்டு பிரித்து சட்ட சபைக்கு தெரிவிப்பாரானால் அவரது புத்திக்கூர்மையை என்னவென்று சொல்லக்கூடும். நமக்கு இதைப்பற்றி அதிகமாக எழுத பல ஆதாரங்களும் ஆத்திரங்களும் இருந்தாலும் அடுத்தாப்போல் கூடும் சட்டசபைக்கூட்டத்தில் இக்குற்றத்தை உணர்ந்து சூத்திரன் என்ற வார்த்தை உபயோகிப்பதற்கு வருந்தி அவ்வார்த்தையை தாம் உபயோகித்திருக்கிற அரசாங்க ஆதாரவிலிருந்து எடுத்துவிட நமது டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்து அதில் அந்தப்படி நடக்காவிட்டால் பிறகு மற்ற விபரங்கள் எழுதலாம் என்கிற எண்ணத்துடன் இதை இதனுடன் முடிக்கின்றோம்.

---

## ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபல் சேர்மென் ஸ்ரீமான் சீனிவாச முதலியாரவர்களது சேர்மென் உத்தியோகத்திற்கும் அதன் மூலமாய் அவர் அடித்து வந்த பகற்கொள்ளைத்தொழிலுக்கும் நவம்பர் மீ 1 தேதி பகல் 12 மணிக்கு சாவு ஏற்படப்போகிறது. மறுசேர்மென் எலக்ஷனும் அன்றே மாலை 4 மணிக்கு போடப்பட்டிருக்கிறது. அன்று நடக்கும் அந்த சேர்மென் தேர்தலுக்கு ஸ்ரீமான் சீனிவாசமுதலியார் நிற்பதற்குகவுன்சிலராய்க் கூட வருவதற்கில்லாமல் கோர்ட்டில் இஞ்சக்ஷன் வாங்கி தடுத்து விட்டதால் தடைப்படுத்தப்பட்டு விட்டார் ஆனதால் இப்பொழுது மறுபடியும் ஒரு மீட்டிங்குபோட்டு வைஸ் சேர்மென் தேர்தலை நிறுத்திவிட்டால் பிறகு மந்திரிக்கும் கலெக்டருக்கும் சிபார்சு பிடித்து தன்னை மறுபடியும் நியமனம் செய்து கொண்டு வேறு தேர்தல் போட்டு அதில் அந்த தேர்தலுக்காக தற்கால சேர்மெனாய் இருக்க ஒரு கவுன்சிலருக்கு 400, 500 ரூ கொடுத்து ஸ்ரீ முதலியார் சேர்மெனாகி விட்டார் என்று சொல்லும்படி செய்து அதிகாரத்தில் உட்கார்ந்து விட்டால் பின்னால் அதுதானாகவே வழக்கல்போல் நின்று விடும் என்கிற தைரியத்தில் 28 ஆம் தேதி ஒரு மீட்டிங்கு போட்டார். அந்த மீட்டிங்குக்கு ஊர் ஜனங்கள் எல்லாம் முனிசிபல் ஆபீசுக்குப்போய் நின்று கொண்டு ஒரு கவுன்சிலரையும்போகவிடாமல் கேட்டுக்கொண்டார்கள். ஸ்ரீமான் முதலியார் போலீசுக்கும் ஆள் அனுப்பினார். முதலியார் சௌகரியப்படி ஆடும் சில போலீசுகாரர்களால் கூட மீட்டிங்கை நடத்திவைக்க முடியாமல் கலைந்துவிட்டது. மறுபடியும் நவம்பர் 1 ஆம் உ பகல் 12 மணிக்குள் இனியும் மீட்டிங் நடந்தாலும் நடக்கும். ஏனெனில் சேர்மென் கொள்ளையடிப்பதற்கு அனுகூலமாய் கவுன்சில் அனுமதி இல்லாமல் செய்த அக்கிரமச் செலவுகளும் வீண் செலவுகளும் பதினாயிரக் கணக்கான ரூபாய்கள் கவுன்சிலால் சாங்க்ஷனாகவேண்டியிருக்கிறது. ஆதலால் ஏதாவது மீட்டிங் போட்டு இவைகளை சாங்க்ஷன் செய்துதான் ஆகவேண்டிய நிலையில் இருக்கிறார். எனவே கூடஇருக்கும் கவுன்சிலர்களில் பெரும்பாலோராவது யோக்கியர்களாக இருக்க வேண்டும். அல்லது ஊராருக்காவது புத்திவேண்டும். கலெக்டராவது நடுநிலைமை உள்ள அறிவாளியாய் இருக்க வேண்டும். மந்திரியாவது யோக்கியப் பொறுப்புள்ளவராயிருக்கவேண்டும். அல்லது அரசாங்கமாவது நாணயமானதாயிருக்க வேண்டும். எல்லாம் ஒன்றுக்கொன்று ஸ்ரீமான் முதலியாருக்கு அண்ணனாகவும் அப்பனாகவும் பாட்டனாகவும் இருந்து கொண்டே போனால் யார்தான் என்ன செய்ய முடியும். தவிர

### மற்றொரு மோசம்.

ஸ்ரீமான் சேர்மென் சீனிவாச முதலியார் அவர்கள் தனது காலாவதி முடிவதற்குள் ஒரு பெரிய முனிசிபல் சொத்தை தனக்கு வேண்டியவர்கள் பேருக்கு குறைந்த விலைக்கு ஏலத்தில்விட்டுபின்னால்தன்பேரில்செய்து கொள்ளலாம்என்கிறமோசக்கருத்துடன்பார்க்குக்கு பக்கத்தில் உள்ள முனிசிபல்இடத்தை ஏலம்விடப் போவதாகரகசியமாய்ஏற்பாடுசெய்துவைத்திருந்தார். இதை அறிந்தஊர் ஜனங்கள் அங்குபோய் குறைந்த விலைக்கு போகாமல் பார்த்துக்கொள்ள கூட்டம் கூடிவிட்டார்கள். இது சங்கதி தெரிந்தசேர்மெனும் அவரால் நியமிக்கப்பட்ட கமிட்டியும் அந்த இடத்திற்கு வராமல் வேறு தேதி ரகசியமாய் போட்டு ஏமாற்றிக்கொள்ளை அடிக்கலாம் என்கின்ற எண்ணத்துடன ஸ்தலத்திற்கு வராமலே இருந்துவிட்டார்கள். போன ஜனங்கள் குறிப்பிட்ட 8 மணி முதல் 11 மணிவரை டிபாசிட்டுப் பணத்துடன் காத்திருந்து வீடு வந்து சேர்ந்தார்கள். வைஸ் சொத்தைக் குறைந்த விலைக்கு கொள்ளை அடிக்கலாம் என்று இருந்த சேர்மனும் அவர் கூட்டத்தாரும் ஏமாந்துபோய் அவரவர்கள் வீட்டில் துக்கம் கொண்டாடினார்கள். இப்படி எதெதற்கென்று ஊர் ஜனங்கள் காத்துக்கொண்டு மோசமும் பகற்கொள்ளையும் அயோக்கியத்தனமும் நடக்கவொட்டாமல் காக்க முடியும் ஆண்டவனே உனக்குக் கண் இல்லையா?

ஒரு நிருபர்

---

## ஆதித்திராவிட மகாநாடு.

காட்பாடிக்கடுத்த பிரம்மாபுரம் என்கின்ற ஊரில் ஸ்ரீமான் ராவ்பகதூர் M. C. ராஜா M. L. A. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டப்பட்ட ஆதிதிராவிட மகாநாட்டில் தலைவர் செய்த உபந்யாசத்தின் முக்கியபாகத்தை வேறு இடத்தில் பிரசுரித்திருக்கின்றோம். அதில் மனுதர்ம சாஸ்திரத்தை கொளுத்தி சாம்பலாக்கவேண்டும் என்பதாகப்பேசியிருப்பதுடன் அதைப்பற்றி முதல்செய்யவேண்டுமென்றுதீர்மானமும் செய்திருப்பதானது அச்சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள சுயமரியாதையை விளக்குகிறது. தவிர வீதியில் நடக்க உரிமைவேண்டும் என்று வேண்டிக்கொண்டிருக்கும் தீர்மானமும் அதுபோன்ற மற்றும் மனித உரிமை கேட்கும் தீர்மானமும் இந்த நாட்டில் மக்கள் சுயராஜ்யமடைவதற்கு தகுந்த யோக்கியதை இல்லையென்று காட்டுவதற்கு உதவியாயிருக்கின்றது எனவே சுயமரியாதை பெற்ற பிறகுதான் சுயராஜ்யம் என்பதைப்பற்றி யோசிக்க இடமுண்டு என்பதற்கு இந்த ஆதிதிராவிட மகாநாடே போதுமான அத்தாட்சியாகும் என்பது நமது அபிப்பிராயம்.

---

## ஜினிவா மகாநாடு

ஜினீவா மகா நாட்டிற்குச் செல்ல இந்தியாவின் சார்பாய் திரு நாட்டம் மொரார்ஜியை முதலாளிகள் பிரதிநிதியாகவும், அவருக்கு ஆலோசனை கூறுபவராய் திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியாரையும் தென்னிந்திய வியாபார சங்கம் சிபார்சு செய்துள்ளது.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றவர்கள் எல்லாம் ஒன்று என்றும் ஒன்றாய்ச் சேர்ந்து சுயராஜ்யம் கேட்கின்றார்கள் என்றும் எப்படி சொல்ல முடியும்? லார்டு ஈர்வின் துரை இங்குவந்து 'நாங்கள் ஊருக்குப் போகிறோம், இந்த கஜானா சாவி இந்த முத்திரை இந்த பட்டம் ஆகிய மூன்றை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்வதாகவே வைத்துக் கொள்ளுவோம். அதை யார் வாங்கிக்கொள்வது? முதலில் ஐயர் வருவார் 'நான்தான் படித்திருக்கின்றேன் எனக்கு அரசாளும் திறமை வெள்ளைக்காரர்களை அடுத்து கற்றுக்கொண்டிருக்கிறேன்" என்று நம்மிடத்தில் சொல்லி வெள்ளையரிடம் சென்று "நீங்கள் இவ்வளவு நாள் இங்கிருப்பதற்கு நாங்களல்லவா உதவியாயிருந்தோம் உங்களை எங்கள் நாட்டாருக்கு காண்பித்துக் கொடுக்காமல், எங்கள் நாட்டாரை உங்களுக்கு காண்பித்து கொடுத் 'தாமே, நீங்கள் நன்றியுடையார் என்கிறீர்களே, அப்படியானால் எங்களிடம் கொடு" என்பார்கள். நாம் சம்மதிக்காத்ததாயிருக்கின்றோமா? 'வெள்ளைக்கார அரசாங்கமிருக்கும்போதே, எங்களை சூத்திரர்கள் என்று கொடுமைப்படுத்தும் நீங்கள் வெள்ளைக்காரர்கள் போய்விட்டால் என்னசெய்ய மாட்டீர்கள்' என்று கேட்டு தடுப்போமா இல்லையா? இதைக் கேட்ட லார்ட் ஈர்வின் 'நீங்கள்தான் பெரும் வாரியாயிருக்கிறீர்களே, நீங்களாவது வைத்துக்கொள்ளுங்கள்' என்று நம்மிடம் கொடுத்தால் பார்ப்பனர்கள் சம்மதிப்பார்களா? 'வெள்ளைக்காரர் இருக்கும்போதே பார்ப்பன துவேஷம் நிறைந்திருக்கின்றது. நீங்கள் போய்விட்டால் நம் கதி என்ன' என்று சொல்லுவார்களா இல்லையா? இப்பொழுதே தன்னையோ உத்தியோகங்கள் தங்களுக்கு இல்லையென்றால் வெள்ளைக்காரர்களுக்குப்போகப்பார்க்கின்றார்களேயன்றி நமக்குக் கிடைக்க சம்மதிக்கின்றார்களா? அதன் ரகசியம்தானே இரட்டை ஆட்சி ஒழியவேண்டுமென்பது. அன்றியும் நாம் இருவரும் சம்மதித்து ராஜியாவதாயிருந்தாலும் மகம்மதியர்கள் சும்மாயிருப்பார்களா? 'நாங்கள் இப்பொழுது 7½ கோடி இருக்கின்றோம் இன்னும் நான்கைந்து வருடத்திற்குள் நாங்களே பெரும்வாரியாக 12 கோடிக்கு வந்துவிடுவோம். அப்பொழுது உங்களையே துரத்திவிட எங்களுக்குத் தெரியும். அதுவரை நீங்கள் போகாதீர்' என்பார்களா இல்லையா? அவர்களும் சம்மதித்தார்களென்றே வைத்துக்கொள்ளுவோம். கிருஸ்தவர்கள் சும்மாயிருப்பார்களா? 'நாங்கள் சிலபேர் உங்களை நம்பி இப்பொழுதுதான் கிருஸ்தவர்களானோம். அப்படியிருக்க நீங்கள் போவதானால் எங்களுக்காகவும் ஒரு கப்பல் அதிகமாக ஏற்பாடு செய்யுங்கள், நாங்களும் உங்கள் கூடவே வந்துவிடுகின்றோம்' என்பார்கள். அவர்களும் ஒப்புக்கொண்டதாகவே வைத்துக்கொள்வோம். எம். சி. இராஜா சும்மாயிருப்பாரா? ஐயா எங்களுக்காகத்தானே கடவுள் உங்களை இங்கு அனுப்பினார், உங்களால்தானே நாங்கள் மனிதர்களாக இருக்கிறோம். அப்படி இருக்கும நீங்கள் இருக்கும்பொழுதே எங்களை வீதியில் நடக்கக்கூடாதென்கிற இவர்கள் நீங்கள் போய்விட்டால் என்ன செய்வார்கள், வண்டியில் கட்டி ஓட்டமாட்டார்களா என்பதை யோசித்துப் பாருங்கள்' என்று சொல்லி காலைப் பிடித்தாவது குறுக்காட்டிக் கொள்வார்களா இல்லையா? இந்த நிலையில் நாம் என்பது யார் என்பதை யோசித்துப் பாருங்கள். ஒன்றும் இல்லை. ஒரு மந்திரி என்கின்ற ஒரு பொறுப்புமில்லாத உத்தியோகம் நமக்குக் கொடுத்திருக்கும்போதே நமது யோக்கியதை இப்படி இருக்கின்றது? வெளியில் சொல்ல வெட்கக்கேடு. அன்றியும் அதற்கு பார்ப்பன சூழ்ச்சியும் அதற்கு மற்ற சூழ்ச்சியும் எப்படி இருந்துகொண்டு நாடு சிரித்து நம்மைமானக் கேடாக்குகின்றது. இனி அரசாட்சியே வந்தால் என்ன கதியாகும் என்பதை நீங்களே யோசியுங்கள். நான் வேண்டுமென்றாவது வெள்ளைக்காரரென்கிறகொள்ளைக்காரருக்கு அனுகூலமாகவாவது பார்ப்பனருக்கு இடையூறாகவாவது சொல்லவில்லை. நாட்டின் உயிர் நாடியைப் பார்த்து உணர்ந்து சொல்லுகின்றேன். எனவே நம்மில் ஒரு கூட்டத்தாரே ஏகபோகமாய் வகிக்கும் ஆதிக்கம் ஒழிந்தால், ஒருவரிடம் ஒருவருக்கு அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டால், வெளிச்சத்தைக் கண்ட இருள் ஓடுவதுபோல் அன்னிய ஆக்ஷி நம்மை விட்டு ஓடிவிடும். இதனால் தான் நான் அதுவரையில் குறிப்பாக நம் வாலிபர்களுக்கு அரசியல் உணர்ச்சி ஏற்படவே கூடாது என்கிறேன். அதனால் என்ன கெடுதி நேரிட்டாலும் நம் வாலிபர்கள் அரசியலினின்று முற்றும் விலகியிருத்தல் வேண்டும். உத்தியோகத்தால் தான் நமது பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு பிளவேற்பட்டது. நம பார்ப்பனரல்லாதார் இயக்கம்உண்மையாக உத்தியோகப்பற்றின்றி ஆரம்பித்திருக்கலாம். அதை ஏற்படுத்திய தலைவர்களும் அதே எண்ணத்துடனிருந்து இறந்திருக்கலாம். இப்பொழுதும் பலர் உத்தியோக வெறிபிடியாதவர்களுமிருக்கிறார்களென்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் கொஞ்சமிருந்தாலும் பிளவு உண்டாக்குகின்றது. நம் வாலிபர் கருத்தெல்லாம் நாம் எப்படி சுயமரியாதையடைவது? நாம் எப்படி விடுதலையடைவது என்பதையேகொண்டிருத்தல்வேண்டும். அதைவிட்டு உத்தியோகம் எப்படி பெறுவதென்ற எண்ணம் வாலிபர்களுக்குத் தோன்றாமலிருக்குமாறு செய்து கொள்ளவேண்டும். உத்தியோகங்களெல்லாம் வெள்ளைக்காரன் கையில் தானிருக்கவேண்டும். ஏனெனில் நாம கஷ்டப்பட்டுக்கொண்டும் ஒருவரை ஒருவர் வைது கொண்டும உத்தியோக வேலை பார்ப்பதில் நமது காலத்தை செலவு செய்து கொண்டுமிருப்பதால் அவன்மேலிருந்து நோகாமல் பணத்தைக் கொள்ளை கொண்டு போகிறான். உத்தியோக மூலம அரசாங்க குற்றமும பழியும் நம்மீது வீழ்ந்து, நாம ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டது தான மிச்சம வெள்ளைக்காரன் அரசியலின போரால் நாம் கேட்டதெல்லாம் கொடுத்துக்கொண்டுதான வருகிறான. நாம் ஒரு காலத்திலும கனவிலும நினையாத உத்தியோகங்களெல்லாம் நமக்குக்கொடுத்திருக்கிறான். அவைகளினால் நாமடைந்த பலனென்ன? ஒன்றுமில்லை. சீர்திருத்தங்களின் பயன்தானென்ன? ஒன்றுமில்லை. முன்பு மூன்று வெள்ளைக்காரர்கள் பார்த்த வேலையை இப்பொழுது எட்டுப் பேர் பார்க்கிறார்கள். இதற்குச் சம்பளம் ஏழைகள் தலையில் கை வைக்கிறார்கள். இரண்டு சீர்திருத்தம் கொடுத்தாயிற்று. மூன்றாவது சீர்திருத்தம் தலைகாட்டுகிறது. அந்த சீர்திருத்தத்தில் கவர்னர் உத்தியோகம் கொடுத்தாலும் கொடுக்கலாம். அதைவிட வேறு உத்தியோகமென்ன யிருக்கிறது? ஒன்றுமில்லை. ஆனால் அதன் மூலம் வெள்ளைக்காரனுக்குப் பூட்சு துடைக்க நாம் போட்டி போடப்போகின்றோம். நேற்றோ அல்லது முந்தைய நாளோ நண்பர் திரு. ஏ. இராமசாமி முதலியார் ஒரு கூட்டத்தில் பேசும் போது ஒன்று சொன்னார்கள். அதாவது பார்லிமெண்ட் முதலிய சபைகள் ஏற்படுவதற்கு முன்பு நமக்கு எவ்வளவோ சௌகரியமாயிருந்தது. இப்பொழுது சௌகரியக் குறைவாக இருக்கிறது. என்ன வென்றால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் நம் நாட்டை ஆளும்போது யாராவது 4 பேர் சேர்ந்து நம்குறையைத் தெரிவித்தால் அப்பொழுதே கடிதமெடுத்து எழுதி ஒரு உத்திரவு பிறப்பிப்பார்கள். அதில் வகுப்புவாரி பிரதிநிதித்துவமிருந்ததாகவும் சொல்லுகிறார்கள். எல்லாருக்கும் சம உரிமை சம சந்தர்ப்பம் இருந்ததாகவும் சொல்லுகிறார்கள். இந்த சீர்திருத்தத்தின் பெயரால் நம்மை யார் உதைக்கிறார்களென்று கூட நம்மால் கண்டு அறிய முடியவில்லை. உண்மையான விடுதலை ஒரு காலத்தில் நம் நாடு அடையுமானால் நம் மக்கள் உத்தியோகத்திலில்லாத காலத்தில் தான் முடியும் என்று நினைக்கிறேன். நான் வரப்போகும் பார்ப்பனரல்லாத வாலிபர்மகாநாட்டிற்குவந்தால் வாலிபர்கள் அரசியலில் தலையிடக்கூடாது என்று ஒரு தீர்மானம் கொண்டு வருவேன். என் கொள்கை உங்களுக்குத் தெரியும், என்னைப் பொறுத்த வரையில் காங்கிரசு ஒழியவேண்டும். இந்து மதம் தொலையவேண்டும். பார்ப்பன ஆதிக்கம் அழியவேண்டும. இம்மூன்று மழிந்தாலொழிய இந்தியாவுக்குவிடுதலை இல்லை, இல்லை; இல்லவே இல்லை. இதை மகாத்மா இடமும் சொன்னேன். என்னை நன்றாய் விசாரித்தார். நான் சொன்னதில் உள்ள தத்துவத்தையும ஒப்புக்கொண்டார். நீ சொல்வதெல்லாம் சரி, அப்படியாவதினால் உலகம் கெட்டுவிடுமென்றார். அப்படியானால் நீங்களே இவற்றைக் கட்டிக்கொண்டு அழுங்கள் என்று சொல்லிவிட்டு வெளிவந்தேன்" 40 வருடமாக காங்கிரஸ் தோன்றியது முதல் அது நிறைவேற்றிய தீர்மானங்களெல்லாம் அநேகமாய் நிறைவேறியது அதற்கு மேலும் சில வந்திருக்கின்றன. வெள்ளைக்காரர்களும காங்கிரசு சொன்னபடி எல்லாம நடந்து வருகிறார்கள். பார்ப்பனர்களுக்குஉத்தியோகம் கிடைத்ததல்லாமல பாமர ஜனங்களுக்கு லாபம் என்ன? கோர்ட்

டுகள், கச்சேரிகள், வக்கீல்கள், நீதிபதிகள், அதிகமானார்கள். இதற்கு வரி அதிகமாயிற்று. நாட்டு மக்களுக்கு சர்க்கார் உத்தியோகமின்றி வேறு வழியில் பிழைக்க மார்க்கமில்லாமல் போய்விட்டது. நம் நாட்டைவிட்டு வாரம் ஒன்றுக்கு லட்சக்கணக்கான மக்கள் பிழைப்பதற்கு வேறு நாட்டிற்கு ஓடுகின்றார்கள். சீர்திருத்தத்திற்கு முன் 40 கோடி ரூபாயாக இருந்த வரி இப்பொழுது 165 கோடி ரூபாயாக பெருகியிருக்கின்றது. இதுதான் சீர்திருத்தத்தின் பலன். யோக்கியமான சீர்திருத்தமானால் நமக்கு நீதியில், வாழ்க்கையில், உரிமையில், வரியில் பலனிருக்க வேண்டும். வீதி விளக்கில் படித்தவர்களும், அன்னச் சத்திரத்தில் சாப்பிட்டவர்களும், பிச்சையெடுத்து பள்ளிக்கூடச் சம்பளம் கொடுத்தவர்களும், இன்று நாட்டையே காட்டிக்கொடுத்து பதவிபெற்று அதிகாரம் செய்கிறார்கள், அவன் தான்தான் அந்த உத்தியோகங்கள் பெற பொறுப்புள்ளவன் என்கிறான். ஒரு காலத்தில் நிறைந்த செல்வவந்தர்களாயும் நாட்டிற்கு பொறுப்புள்ளவர்களாயும் யோக்கியர்களாயும் நீதி துரந்தரர்களாயுமிருந்தவர்கள் இப்போது கையில் அடைப்பைபோல் காகிதக்கட்டு ஒன்றெடுத்துக்கொண்டு பார்ப்பனர்கள் வீடுகளில் ஏறி இறங்கவேண்டியிருக்கின்றது. ஒரு கவர்னரும் இரு நிர்வாக அங்கத்தினரும் மேற்சொன்ன மூவருக்கும் மூன்று காரியதரிசிகளுமாயிருந்தார்கள். இப்பொழுது அவர்களுடன் ஐவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு காரியதரிசியும் அதிகமாக ஏற்படுத்தப்பட்டது. வெள்ளைக்காரர்கள் முன்பு வாங்கியதில் ஒரு காசும் குறையாது வாங்குகிறார்கள். மற்ற ஐவருக்கும் 5,000 ரூபாய் வீதம் எப்படி கொடுக்கமுடியும்? இவ்வருஷம் நடக்கப்போகும் காங்கிரசு தானா ஆகட்டும். அதனால் நாட்டிற்கு என்ன பலனுண்டாகக்கூடும்? அதிகமான சீர்திருத்தம் என்று கவர்னர் பதவி கேட்பார்கள். வெள்ளைக்காரரும் கொடுப்பார்கள். அதற்காக நம் மாகாணத்தை மூன்று பிரிவாகப் பிரித்து ஒன்று சீனிவாச சாஸ்திரிக்கும் ஒன்று கோஷன் பிரபுவுக்கும் மற்றொன்று இன்னொரு வெள்ளைக்காரனுக்குமாக பங்கிட்டுக்கொள்ளுவார்கள். அப்பொழுது ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய்தான் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று காங்கிரசு தீர்மானிக்கும். ஏனென்றால் உத்தியோகத்திற்குத் தக்க சம்பளம் வேண்டாமா என்பார்கள். அப்போதும் வெள்ளைக்காரன் தான் வாங்கும் சம்பளம் வாங்கித்தான் தீருவான். மேற்கொண்டும் ஒரு கவர்னராவான். சம்பளத்திற்காக அதிகமான இரு கவர்னர் காரியின் வில் உயர்த்தியோ குடிவரியை உயர்த்தியோ, சாமன்வரி உயர்த்தியோ, நிலவரி உயர்த்தியோ, வருமானவரியை உயர்த்தியோதான் தீரவேண்டிவரும். இவ்வரிச் சுமைகளை சுமப்பவன் கதி என்ன? இதைப் பற்றி மகாத்மாவைக் கேட்டதில தந்திரக்காரர்கள் நாட்டை ஆட்சிபுரிவது சுயராஜ்யம்தானென சொன்னார். அப்படியே இருக்கட்டும். அதில் நமக்கும் உங்களுக்கும் என்ன பங்கு இருக்கவேண்டும் என்றேன்.

தக்க மகான்கள் அந்த இடத்திற்கு வந்தால் எல்லாம் சரியாகும். அதுவரை அந்த ஸ்தாபனங்களை அழிக்காமல் வைத்திருக்கவேண்டுமென்றார். உங்களைவிட வேறொருமகான் எப்பொழுது வருவார், அவர் யார்? ஒரு கோடி ரூபாய் கேட்டீர்கள், 15 நாளில் கொண்டுவந்து கொடுத்தார்கள். 1000 பேர் சிறைக்குச் செல்லுங்களென்றால் முப்பதினாயிரம் கணக்காக சிறைக்குச் சென்றார்கள். சிறைச்சாலைகளிலே இடமில்லாதவாறு செய்தார்களே இதைவிட மகான் யார் என்றேன். ஒருவர்மீது கொண்டுள்ள வெறுப்பால் அப்படிப் பேசுகிறாய் என்றார். எனக்கு யார்மீதும் கோபமில்லை. காங்கிரசு ஒழியவேண்டும். அதை ஆரம்பித்தவர்கள் உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டு ஆரம்பித்தார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர், அப்படியானால் தாதாபாய் நவரோஜி, கோகலே, முதலிய இவர்களும் அப்படிப்பட்டவர்களா என்றார். தாதாபாய் நவுரோஜி கோக்கலே மகாத்மா காந்தி என்ற 3 பேர் யோக்கியர்கள் அதிலிருந்தால் பாக்கி 97 பேர் யோக்கியதையைப் பார்க்கவேண்டாமா என்று சொன்னேன். அன்றியும் பார்ப்பனர்கள் நாட்டிற்கு ஏதாவது நன்மை செய்திருக்கிறார்களா என்று யோசித்து ஒன்று சொல்லுங்கள் என்றேன். சொல்லமுடியாது. ஆனாலும் தள்ள முடியாதென்றார். கடைசியாக உத்திரவு பெற்றுக்கொண்டு திரும்பிவிட்டேன். குருட்டு நம்பிக்கைகள் நன்றாய் நம் இரத்தத்துடன் கலந்து வேரூன்றி விட்டது. இதனால் என்ன ஆனாலும் வாலிபர்கள் முனைந்து நின்று வேலைசெய்ய முற்படவேண்டும். வாலிபர்களென்றால் 18 வயதிலிருந்து 26 வயதிற்குட்பட்டவர்கள்தான் என்பது என் எண்ணமல்ல. என் எண்ணப்படி சாகும் தருவாயிலிருக்கும் முதியோனும் அவன் மனதில் மக்களுக்காக பாடுபடவேண்டும். அதற்காக உயிரைவிடத்தயார் என்று எண்ணினால் அம்முதியோனும் வாலிபனே. ஆனால் வயதில் வாலிப பருவத்திலிருந்தும் நமக்கென்ன இதைப்பற்றி என்று கடமையைக் கவனிக்காமலிருப்பவன் ஒருகாலமும் வாலிபனாகான். ஆகவே நீங்கள் தைரியமாக உணர்ச்சியோடு உழைத்துப் பெரியோர்களையும் சுயநலக்காரர்களையும் உங்கள் வசம் திருப்ப முயற்சி செய்தல் வேண்டும். இப்பொழுது நாம் சமத்துவத்திற்காக பாடுபட்டு வெற்றி பெற்றுவிட்டால் பிறகு ஊர் சாக்கடைகளை மெள்ள ஒழித்துவிடலாம். மற்றும் சுயமரியாதை சத்தியாக்கிரகத்தையும் கவனியுங்கள்.

எனக்குத் தெரிந்தவைகளையும் என் மனதிற்குத் தோன்றியவைகளையும் பழிபாவங்களுக்காக சிறிதும் அஞ்சாது உங்கள் முன்னிலையில் பகர்ந்தேன். அதில் எது சரியென்று உங்களுக்குத் தோன்றுகிறதோ அதைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு வேண்டி முடித்துக்கொள்ளுகிறேன்.

அவைத் தலைவர் முடிவுரையாக சிறிது பேசியதும் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 8 மணிக்குமேல் கூட்டம் இனிது கலைவுற்றது.

---

## காட்டுமன்னார்குடி. ஸ்ரீ வீரநாராயணபுரம் ஸ்ரீ வீரநாராயண சுவாமி தேவஸ்தானத்தில

# பார்ப்பன அக்கிரமம்.

மேற்படி ஸ்வாமி சந்நிதியில் அர்ச்சகர்கள், பரிசாரகர்கள், தளிகை செய்கிறவர்கள் பார்ப்பனர்களே. ஆக்கோவிலுக்கு மான்யம் முதலிய சொத்து கிடையாது.

நித்ய, மாஸ, அயன, வருஷ உற்சவாதிகள் பார்ப்பனரல்லாதவர்களின் பெருநன்கொடையாலேயே நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் பார்ப்பனரல்லாதவர்கள் கோவிலுக்குச் சென்றால், ஸேவை, தீர்த்தம், பிரசாதம் முதலியவைகள் பார்ப்பனருக்குத்தான் சொந்தமென்றும், மற்றவர்களுக்கு இல்லையென்றும் சொல்லுகிறார்கள். தவிர, சேவை, தீர்த்தம், பிரசாதம் வழங்கும் காலங்களில் பார்ப்பனரைப் பார்க்கக்கூடாதென்றும், பரிசிக்கக்கூடாதென்றும், தூரமாயிருந்து கிடைத்தால்தான் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றும் விரட்டுகிறார்கள்.

பிராமணரல்லாதவர்களே உபயம் செய்ய எல்லாச் சாமான்களும் கொடுத்தாலும், அவைகளில் முக்கால் பாகம் அர்ச்சகர்களே எடுத்துக்கொண்டு பாக்கி கால்பாகத்தை அமுது செய்து அதை விநியோகம் செய்யும்போதும், அந்தியாபாகம் முதலியவை போகபாக்கியுடைய பார்ப்பன கோஷ்டிக்கே போய் விடுகிறது. மற்றவர்களுக்கு கிடையாதென்று சொல்லிவிடுகிறார்கள். உரிமையில்லாது எம்பெருமானைத் தொழ வருபவர்களும் இக்கோவில் பார்ப்பனர் செய்யும் அக்கிரமத்தால் கலங்கி வெளியில் வருகிறார்கள்.

"உன்னைப்போல் எத்தனையோ பேர் உபயம் செய்யக் காத்திருக்கிறார்கள். எங்களுக்குப் பாதந்தாங்கியாய்ச் செய்தால் செய். இல்லையானால் வேறு ஒருவன் இல்லையா" என்று பார்ப்பன அர்ச்சகர்கள் உபயக்காரர்களையும் அநாவசியமாய்ப் பேசுகிறார்கள். இவைகளையறிந்தும் நம்மவர் இவர்களைக்கொண்டு உபயம் செய்ய முற்படுவதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கிறது.

நித்யம் 20 தேசாந்திர பாகவதர்களுக்கு அமுது செய்விக்க சில கனவான்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் கட்டளைப் பிரசாதங்களை பிராமணர்களுக்கன்றி மற்றவர்களுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள்.

இதைப்பற்றி எத்தனையோமுறை கோயில் தர்மகர்த்தாக்களிடத்திலும் தெரிவித்திருக்கிறது

ஆகையால் மேற்கண்டபடி நியாயவிரோதமாக நடக்கும் காரியங்களைக் கண்டித்து சீர்திருத்தும்படிக்குச் செய்யவேண்டுமென்று 10—10—27ல் செட்டியார் பிள்ளையார் கோவிலில், ஸ்ரீமான் பொன்னம்பலம் பிள்ளையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஒரு சபை கூட்டி தீர்மானங்கள் செய்து எண்டௌமெண்ட் ஆபீசுக்கும், தேவஸ்தான கமிட்டிக்கும், தர்மகர்த்தாக்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று ஒரு நிருபர் எழுதுகிறார்

---

## பார்ப்பனியமொழிந்த சடங்கு.

1. பெரியகுளம் தாலுகா வடுகபட்டி என்ற கிராமத்தில 16—9—27ல் திரு. ந. சாமி நாயகர் அவர்களுடைய தகப்பனார் இறந்ததற்கு பிராமணப் புரோகிதரை நீக்கி ஆவ்வூர் நண்பர்களைக்கொண்டு இறந்த தினச்சடங்கை வெகு விமரிசையாய் நடத்தினார். அவ்வமயம் வந்திருந்த சுமார் 50 ஏழைகள் அன்னமளிக்கப் பட்டார்கள். என்று நா. போத்தராஜ் நாயுடு எழுதுகிறார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

...களுக்கு இழைக்கப்படும் தீமையைச் சிறிதும் கருதாமல் அது இன்னும் சர்வ காலமும் நீடித்திருக்க வேண்டுமென்று முயலுவது, வெறும் மூட நம்பிக்கையால் ஏற்பட்ட குருட்டு பக்தியின் காரணமாய்த் தான் என்று வற்புறுத்த வேண்டும். அநேக குடும்பங்களில் ஏழைகளாயிருக்கும் போது உல்லாசமாய் சுயேச்சையாய் இருந்தவர்கள், புதியதாய்ப் பணம் படைத்துவிட்டால் கோஷாக்களாய்ப் போய் விடுகிறார்கள். இது பண மமதையால் நேருகின்ற விபரீதம். மனிதனுக்கு ஸ்திரீயிடத்தில் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையும் பிறர் தம் மனைவியை அபகரித்துச் சென்று விடப் போகிறார்களே என்ற துர் எண்ணமும் தான் படுதா முறைக்குக் காரணம்.

மேலும், நம்மையே நாம் நம்ப முடியாது என்றும் இதிலிருந்து ஏற்படுகிறது. ஒரு மனிதன் தனது தாய், சகோதரி, மகள் இவர்களுடன் தனித்து இருக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அதைப் நினைக்கும்போது கிறிஸ்தவ வேதமாகிய பைபிளில் உள்ள ஒரு கதை நினைவுக்கு வருகிறது. லாட் என்பவனையும் இவனுடைய இரண்டு பெண்களையும, இவர்களைச் சார்ந்த காட்டு ஜனங்களையும் பற்றிய கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதில் மிருகங்களைப் போல் ஒரு தாயார் தன் மகனுடனேயே கலந்து அவனிடம் பிள்ளைகளைப் பெறுகிறாள். இதே தான் 'அயித்திரேய பிரம்மன்' என்ற நூலிலும் காணப்படுகிறது,

'ஆசையால் தான் மகன் தாயுடனும், சகோதரியுடனும் கூடி குழந்தைகள் பிறக்கின்றன' என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்திரீகளுக்கு என்ன பதவி இல்லறத்தில் அளிக்கவேண்டு மென்பதைப் பற்றியும் பண்டை இந்தியாவில் ஸ்திரிகள் எவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்தார்கள் என்பதை ஓரிடத்தில் விளக்கி யிருக்கிறது. விருந்தாளிகள் வந்த போது விருந்தோம்புகிறவருடைய மனைவியும் விருந்துக்கு வந்துள்ள நண்பர்களுடன் சேர்ந்து ஒரே பந்தியில் உட்கார்ந்து உண்டதாக அதில் கூறி யிருக்கிறது. இது தற்கால ஐரோப்பிய நாகரிகத்தை அனுசரித்த தாகும். ஆனால் இந்த வழக்கத்தை இப்பொழுது நாம் அடியோடு மறந்துவிட்டோம். படுதா அனுஷ்டிக்காத குடும்பங்களில் கூட இப்பொழுது ஸ்தரீகள் வேறு பந்தியாகவும், ஆடவர் வேறு பந்தியாகவும் தான் உட்காருகின்றார்கள். நமது மூட பக்திக்கும், நமது தற்கால அக்கிரம வழக்கங்களுக்கும் ஒவ்வாத சாஸ்திர வாக்கியங்களை யெல்லாம் நாம் சௌகரியத்திற் கேற்றபடி மறைத்து, ஒளித்து விடுகிறோம். படுதா முறையெல்லாம் அந்தந்தக் குடும்பத்தின் அந்தஸ்தையும், செல்வத்தையும் நேரில் பொறுத்திருக்கிறது. ஒரு குடும்பம் வரவர பணத்தில் பெருத்து அந்தஸ்து அதிகமாக ஆக, அதன் பெண் மக்களுக்கும் சனியன் பிடித்தது. கற்கோட்டைகளில் போட்டு அவர்களை அடைத்து விடுகிறார்கள்.

இஸ்லாம் இந்தியாவுக்கு வந்த பின் நேர்ந்த துன்பங்களால் தான் நமது ஸ்த்ரீகளை படுதாவால் மூடி வைக்க ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இஸ்லாத்தில் ஸ்த்ரீகளைத் திரைபோட்டு மறைத்து வைக்கவேண்டுமென்று ஒரு நியதியுமில்லை என்று சொல்லின், பலருக்கு ஆச்சரியமாயிருக்கும். நபிகள் நாயகத்தின் காலத்திலேயே அராபிய மாதர்கள் தங்கள் முகத்தைத் திறந்த படியே வெளியில் தாராளமாய்ச் சென்றார்கள். ஸ்திரீகள் கோஷாக்களா யிருக்கவேண்டுமென்று குரானில் ஓரிடத்திலும் காணவில்லை. ஆனால் இஸ்லாமிய நாடுகளில் பெரும்பாலும் இது எப்படி அனுசரிக்கப்படத் தலைப்பட்டது என்பது இன்னும் ஒருவராலும் கண்டு நிர்ணயிக்கப்படவில்லை.

மேலே நாம் குறிப்பிட்டவை யெல்லாம் மிகைப்படுத்திக் கூறப்பட்டவை யென்றும், தாறுமாறாய் எழுதப்பட்டவை யென்றும், இதை கவனத்துடன் படிக்காதவர்கள் நினைக்கக்கூடும். ஏனெனில், படுதா முறை பலவகைப் பட்டதென்றும், பல திறப்பட்டதென்றும் நாம் கூறினோம். ஆனால் அறைகளில் போட்டு சிறைப் படுத்துவதைப் போன்றதல்ல. ஆயினும் இதுவும் சில இடங்களில் அனுஷ்டிக்கப்படுகிறது. சில அரசர்களின் மனைவிமார்கள் மீது சூரிய கிரணம் கூடபட்டதில்லை என நமது கவிகள் சிலர் வர்ணித்திருக்கிறார்கள். இந்த வர்ணனை சில இடங்களில் உண்மையில் பிரத்தியட்சமாய்க் காணலாமெனில் அது நமது துரதிருஷ்டமே. இந்த முறையினால் ஏற்படும் தீமையும், அதன் கொடுமையின் தாரதரத்தைப் பொறுத்திருக்கிறது. எப்பொழுது, எப்படி இது முதன் முதலில் அனுஷ்டிக்கப்பட்டது என்று நிச்சயமாய்க் கூற முடியவில்லை. இஸ்லாம் இந்தியாவுக்கு வந்ததால் அது தோன்றிற்று என்று கூறுதல் தவறு. ஆனால் இஸ்லாத்தினால் தான் அது மிகுதியாகப் பரவியிருக்கிறது. சிந்து முதல் மலையாளம், தக்ஷிணம் மைசூர், சென்னை மாகாணம் வரையில் ஸ்திரீகள் திரைபோட்டு மூடிக்கொண்டு மறைத்துக் கொள்ளுகிறதில்லை. இங்கும் தான் முகம்மதியர்கள் படை யெடுத்துச்சென்று யுத்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன. காசுமீரமும், பஞ்சாபும் வடக்கேயிருந்தும் மேற்கேயிருந்தும் சரித்திரம் தொடங்கிய நாளாய் தாக்கப்பட்டுத் தான் வந்திருக்கின்றன. அங்கே ஸ்திரீகள் நிர்வாணமாய் பொது ஸ்தலங்களில் ஸ்நானஞ் செய்தலாகாதென்ற நாணங்கூட படைத்தவர்களாயில்லை. இவ்வளவுக்கும் அவர்கள் இந்தியாவில் மற்றெந்த பிரதேசத்தில் உள்ள மாதரையும் விட மிகவும் ரூபலாவண்ணியம் படைத்தவர்கள் ஆனால் பேஹாரில் தான் கோஷா முறை வெகு கடுமையாக வழக்கத்திலிருந்து வருகிறது. அங்கு மைதிலர்கள் என்ற வகுப்பினரில் மாமியார் மட்டுமல்ல மாமனார்கூட மாப்பிள்ளையின் முன் தென்பட மாட்டார்கள். தெலுங்க பிராமணரல்லாத உயர் வகுப்பினரும் இந்த முறையைக் கையாட ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் வழக்கப்படி தலையை புடவையால் மூடிக் கொள்ளக்கூடாது. இவர்கள் கோஷாக்களாயிருக்கவேண்டுமெனில் முக மூடி அணிந்து கொள்ளவேண்டும். இதைக்கண்டு நாம் பரிதபிக்கத்தான் வேண்டும்.

கோஷா முறை அனுசரிக்கப்படினும் இல்லாவிடினும், மகாராஷ்டிரர் தமிழர் போல் சுயேசை யளிக்கப்படினும், நாயர் ஸ்திரீகளைப்போல் உடையில் அதிக கவனம் செலுத்தப்படாவிடினும், எங்கணும் இந்தியா முழுதும் ஆண் மக்கள் பெண் மக்களைத் தாழ்த்தி வேற்றுமை பாராட்டித்தான் நடத்துகிறார்கள். பூர்ண சமூக சுயேச்சை அவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

"தமிழ்நாடு' மொழி பெயர்த்தது.

---

## உடனே தேவை.

"அபூர்வ சம்பாத்ய முறைகள்" என்ற ஆச்சரியமான புஸ்தகத்தைப் படித்து முடிந்ததும் உடனே சம்பாதிக்கத் தொடங்கலாம். விசேஷ நற்சாக்ஷிகள் பெற்ற மிக்க உபயோகமான அரிய நூல். பிரதி காப்பி விலை அணா 12. வி. பி. செலவு பிரத்தியேகம். ஆர். சேஷன், எடிடர், ஸ்ரீரங்கம் போஸ்டு, (திருச்சி) தென் இந்தியா.

---

## பிராமணீயம் ஒழிந்தது.

ஸ்ரீவில்லிபுத்தூர்வாசியும் ஓர் பிரபல வியாபாரியுமான ஸ்ரீமான் டி. சுப்பிரமணிய பிள்ளையென்பவர் தம்முடைய தகப்பனார் இறந்த பதினாறாவது நாளாகிய கருமாதியன்று பிராமணர்களை நீக்கி சடங்குகளைச் செய்து முடித்தார்.

நிற்க அவருடைய வீட்டுப் பஞ்சாங்கய்யருக்கு கண்ணில் ஓர்வித நோயுண்டாயிருப்பதால் அவர் திருப்பத்தூருக்குச் சென்று சிகிச்சை செய்து வருகின்றாராம். அவருக்கு இந்த சமாசாரம் தெரியாதாம் பின்பு எவ்வாறோ கேள்வியுற்று சுப்பிரமணிய பிள்ளைக்கு ஓர் கடிதம் எழுதியிருக்கின்றாராம். அதில் மேற்படியாருடைய தகப்பனார் இறந்ததைப்பற்றி தான் மிகவும் வருத்தமடைவதாயும், கருமாதி தினத்தன்று தான்வந்து புரோகிதம் செய்வதற்கு சாத்தியப்படாதென்றும், தன்னுடைய அண்டை வீட்டுக்காரரொருவரை வைத்து புரோகிதம் செய்து கொள்ளும்படியாயும், தானும் அவ்வாறே அண்டை வீட்டுகாரருக்கு கடிதம் எழுதியிருப்பதாயும் எழுதியிருந்தது. என்னே! இவருடைய சுதந்திரம்! ஆனால்பிள்ளையவர்கள் பிராமணரை நீக்கியே கருமங்களைச் செய்து முடித்தார். இதைக் கேள்வியுற்ற பார்ப்பனர்கள் "இன்னும் அநேகர் இவ்வாறு செய்துவிடின் நம் கதி என்னாகும்" எனமிகவும் கவலையுறுகின்றனர். அந்தோ! பரிதாபம்!! என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## வியாசப் போட்டிப் பரிசு

அடியிற்கண்ட மூன்று வியாசங்களில் ஏதாவது ஒன்றைப்பற்றி மாத்திரம் செந்தமிழ் நடையில் பொருட் சுவையுடன் எழுதும் கட்டுரைகட்கு முதற் பரிசு ஓர் தங்கப் பவுனும், இரண்டாவது பரிசு ரூ. 5ம் கொடுக்கப்படும். வியாசங்கள் யாவும் டிசம்பர் மாதம் 1-ம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். வியாசங்கள் பூராவும் "இந்திய கேசரி"க்கே உரியன.

வியாசங்களாவன,

1. புகழேந்தி அல்லது ஔவை இவர்களில் ஒருவரைப்பற்றி எழுதி அன்னாரின் கவித்திறமையை அவரியற்றிய கவிகளால் விளக்குக.
2. பாரத தேசத்தில் கற்புக் கரசியாக விளங்கிய ஓர் மாது சிரோன்மணியின் ஜீவிய சரித்திரத்தைச் சுருக்கி எழுதவும்.
3. சுவாமிவிவேகானந்தர் அல்லது சுவாமி ராமகிருஷ்ண பரம ஹம்சர் இவர்களில் ஒருவரின் சித்தாந்தத்தைப் போதனையாக எழுதவும்.

மற்ற விபரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

பத்திராதிபர்,
"இந்திய கேசரி"
தெஹிவெலை,
இலங்கை.

(2-ம் பக்கத் தொடர்ச்சி).

தார்க்கும் அவளே அச்சாணியாவாள் இந்த உண்மையை நமது முன்னோர் நன்குணர்ந்தமையினால்தான் முதலில் அவளை மரியாதைசெய்து போற்றி வந்ததும், பின்னர் தாழ்மைப் படுத்தி அவளது சுயேச்சையைத் தடுத்துவந்ததுமாகும். என்னே இது முன்னுக்குப் பின் முரண்படாதோ எனக் கேட்கலாம். ஆயினும் இதுவே உண்மை. ஒருவனுடைய மனைவியின் மானத்தைக் காப்பதற்காக ஒரு இந்தியன (இவ்வொன்றில் இந்துக்களும் முகம்மதியர்களும் ஒரே உணர்ச்சியுடையவர்களாவார்களாதலால்) எவ்வளவு முயற்சி யெடுத்துக் கொள்வானோ அவ்வளவு முயற்சியையும் தன்னுடையதும் தன்னுடைய நாட்டினருடையதுமான அரசியல் முன்னேற்றத்தையோ பொருளாதார முன்னேற்றத்தையோ கருதி யெடுத்துக் கொள்ளமாட்டானென்பது உறுதி. குருக்ஷேத்திரப் போர்க்களத்திடை அருச்சுனன் கிருஷ்ணனிடம் இதைக்குறித்து என்ன கூறினானென்பதைக் கவனியுங்கள். பெண்களின் மானம் எவ்வளவு விலையுயர்ந்தது. ஆகையால் பெருஞ் சண்டை விளைவதினால் அவர்களது மானத்துக்குக் கேடு நேரிடுவதானால் அது எவ்வளவுக் கஞ்சத்தக்கது! இதல்லவோ அவன் கூறியதன் திரண்ட கருத்து. அவ்வுணர்ச்சி யின்றுமிருக்கின்றதல்லவோ? ஒவ்வேரிடங்களில் தக்க நியாயமுங் காரணமுமின்றி கால வியற்கை மாறுபாட்டால் இவ்வுணர்ச்சி யில்லாதிருப்பதைப் பார்த்து வருந்தவும் வேண்டியிருக்கிறது. தற்காலத்து ஐரோப்பிய மக்கள் அர்ச்சுனன் கொண்ட அச்சத்தைக் கொள்ளவில்லை. அர்ச்சுனனும் அவன் காலத்தோரும் 'வருணசங்கர்கள்?" என்ற வைப்பாட்டிமக்களைக்கண்டு வெறுப்படைந்ததைப் போல் அவ்வளவு வெறுப்பை இவர்கள் கொள்ளுவதில்லை. ஏன், போர் முறை குறித்து அத்தகையோரது உதவியையே பெரிதும் நாடிப்பெறுகின்றனரன்றோ?

### தற்கால மேனாட்டுக் கற்பொழுக்கம்

மேனாடுகளில் தற்காலத்தில் ஆண் பெண்களுக்குரிய இணைவிழைச்சி யொழுக்கமே பெருத்த கவலைக்கிடமானதா யிருக்கிறது, ஏனென்றால் சமூகத்துவ ஆராய்ச்சிப்படியும் அறிவு நூலாராய்ச்சிப்படியும் அவர்களுடைய சமூக முன்னேற்றத்துக்கு அதுவே மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாயிருக்கின்றது. ஆன்மவளர்ச்சி இதற்கு வேண்டியவாறு அறிவு கொளுத்தியிருக்கிறது. கரு உற்பத்தி அடக்கு முறையைக் குறித்தெழுந்த நூல்களெல்லாம் இதை நன்காராய்ந்திருக்கின்றன. உடற்கூற்றுவகைப்படியும், நீதிமுறைப்படியும், மனோதத்துவ ஆராய்ச்சிப்படியும் நன்காராய்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது. ஐரோப்பியரும் சமூகத்தத்துவநிபுணர்களும் அறிவாளிகளும் இவ்வாறு ஆராய்ந்து நோக்க முடிவுகளைக்குறித்துக் கருத்து வேறுபாடுகளிருக்கலாம். ஆனால் ஒன்றுமட்டுமொப்ப முடிந்ததாகும் அது என்னவென்றால், மிகவும் கண்விழிப்புடனிருந்து வருவதும், அரசியற்றுறையிலும், பொருளாதாரத்துறையிலும் மிகவும் மேலோங்கியிருப்பதுமான மேனாட்டில் மற்றெந்த சமூகச்சிக்கல்களும் கவனிக்கப்படாதனபோலக் கைவிடப்பட்டு இவ்வொன்று மட்டும் பெரும் உயர் நிலையான இக்கட்டு நிலையாகக் கருதிக் கவனித்து வரப்படுகிறதென்பதே. இதற்கு அரசியல் சம்பந்தமும் பொருளாதாரச் சம்பந்தமுமில்லாமல் போகவில்லை. பெண்களை இன்னல் பட்டு வறுமைவாழ்வில் கிடந்துழலவிட்டும் உணர்ச்சி குறைவுபட்டு அதனால் சிந்தை யொழுக்கமும் உணர்வொழுக்கமும் கெட்டொழியுமாறும் விட்டுவிடக்கூடாது ஆகையால், உலகத்தில் பொருளாதாரத்தின் முக்கிய பகுதி பெண்களது வேலையையே பொறுத்தது. அவர்களது எளிய சரீர உழைப்புமட்டுமல்ல இப்பொழுது குறிக்கப்பட்டது. அதாவது, புத்திவன்மையினாலும் அறிவினாற்றலாலும் உழைத்து வருவதைக் குறித்தேயாகும்.

### ஐரோப்பியக் கவலை

இச்சிக்கலைக் குறித்து ஐரோப்பியர்கள் கொண்டிருக்கிற கவலையும், கருத்துப்போக்கும் நாடகமேடையில் நன்றாய் வெளிப்படக் காணலாம். "நாவல்கள்" என்ற புனைகதைகளிலும் நன்கு புலப்படுகின்றன. கோடிக்கணக்கில் இந் "நாவல்கள்" அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. வெளியிடப்பட்டிருக்கும் புத்தகங்களில் இவ்வளவு பகுதிகள் நாவல்கள் இவ்வளவு பகுதி "நாவல்கள்" அல்ல வென்று வரையிட முடியாது. ஆகவே இணைவிழைச்சி முறையில் ஐரோப்பாவும் அதன் குழந்தையான அமெரிக்காவும் கைக்கொள்ளும் மனப்பான்மை உலகத்திலே மக்கட் சரித்திர வரலாற்றில் எங்கனுங் காணப்படாததொன்றாகும். கருத்துக்கள் எளிமையில் மாறுதலடைந்து மனப்பான்மையும் மாற்றியமைக்கப்படுகின்றன. ஆகவே மாறுதலும், தர்க்கமும் பண்டை யொழுக்கங்கள் கொள்கைகள் முதலியவற்றிற்கு மாறுகோள்களும், மிகுந்து காணப்படுகின்ற இக்காலத்தில் உணர்ச்சியிருக்குமாம், நற்பயிற்சிபெற்றும் இருப்பதாகக் கூறப்படும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கேட்டுத்தெரிந்துகிட்டு நடந்துவருமாறு எவ்வளவோ எழுதப்பட்டு செய்கையிலும் நடத்திக்காட்டப்பட்டும் வருகின்றன. அரசியல் கிளர்ச்சியாய் இருந்தாலும் சரி, அல்லது சமூக கிளர்ச்சியாயிருந்தாலும் சரி, ஒவ்வொரு கிளர்ச்சிக்கு முன்னர் வாய்புகீறி யெழுதுவதும், நடப்பதும் இயற்கையாகும். பழைய அரசியல் புரட்சிகளில் ஐரோப்பிய மாதர்கள் தமபகுதிவேலையைச் செய்தேயிருக்கின்றனர். இனியும் வரப்போகும் புரட்சிகள், அவர்களால் ஆக்கப்பட்டும் அளிக்கப்பட்டும் வரலாம். அதனாலன்றோ இச்சிக்கல் குறித்து இவ்வளவு பாடும்? பூரண சுயேச்சை விரும்பும் கட்சியைச் சேர்ந்த எனது நண்பரான ஒரு ஐரோப்பியமாது ஒரு தரம் லாகூருக்கு வந்திருந்தார். அவருக்கு அவ்வூரில் பார்க்க வேண்டியவற்றை யெல்லாம் காட்டிவிட்டு அவ்வூரில் ஹாக்கக்கடாய் என்பவர் ஞாபகக் கருதிக்கூடும் ஒரு சந்தைக்குமழைத்துச் சென்றேன். அதைப் பார்த்த அவள், "இந்தியா ஒரு ஆடவருலகமே அங்கு பெண்களுக்கு வேலையில்லை" யென்று கூறினார். ஐரோப்பாவிலோ சில வேளைகளில் ("சிலவேளைகளி லென்று தான் கூறுகிறேன்) பெண்களே மிகுந்துக்காட்டுகின்றனர் அவர்களை ஒதுக்கிப்போவதென்பது முடியாததாகவே காணப்படுகிறது. எங்குபார்த்தாலும் பெண்கள். உலகானது எப்படித்தன் அச்சாணியில் சுற்றிவருகிறதோ அதேபோல் ஆடவர்கள் அவர்களைச் சுற்றிச்சுற்றி வருவதாகவே தோன்றுகிறது. சமூக தத்துவ நூல்களின் பெரும் பகுதியிதைக்குறித்தே யெழுந்திருக்கிறது. இதுவே வாழ்க்கையின் பெருஞ் சிக்கல். இது இப்படியாக நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? நாமும் ஓடிக்கொண்டுதானிருக்கிறோம். ஆனால் எந்தப்பக்கத்தில் ஓடுகிறோம்? எவ்வளவு வேகங்கொண்டு ஓடுகிறோம்?

"பீப்பிள்"

### ராஜ்பாலைக் குத்தியவன்.

ராஜ்பாலைக் குத்திக் காயப்படுத்திய குதாபக்ஷ் என்பவர் தன்னை விடுதலை செய்து விட்டால் சதியாலோசனையை வெளிப்படுத்துவதாக சர்க்காருக்கு விண்ணப்பித்துக் கொண்டிருப்பதாக லாகூர் ஸன்டே டைம்ஸென்னும் பத்திரிகை வெளியிடுகிறது. அந்த பத்திரிகை இப்போது ஏற்பட்டிருக்கும் சமூகச் சச்சரவுகள் காரணமாக ஆள் தூக்கிச் சட்டத்தை பஞ்சாபில் அனுமதிக்கலாமா வென்று சர்க்கார் யோசித்துவருவதாகவும் அறிவிக்கிறது.

"தமிழ் நாடு"


## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.

# $ 500 இனாம்! $ 500 இனாம்!!

சதானந்த யோகேஸ்வரருடைய

## மகா வீரியவிருத்தி லேகியத்தை

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (ரிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

### ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.



இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பல்பவகைக்களையுங்கொண்டுசெய்யப்பட்டது இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தனவந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், அரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி, பலவீனம் மூதலியவைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும். இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனனி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.

உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M. சோட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த
யோகீஸ்பாரின் பிரதம சிஷ்யரும்.
வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம்
சாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர்
ஸ்ரீமான் இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை
ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
கூ. லாஸால் பண்டிதன்
ஸ்ரீமத் T. R, மகாதேவ பண்டிதர் அவர்களின்
மருமகரும் மாணாக்கருமாகிய
மகா-ா-ா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான். ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு. உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75.

பிராஞ்ச் ஆபீஸ்:— 17, சைனா ஸ்திரீட்,
பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பெனி,
251 கிராக்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லாமருந்து அனுப்பப்பட மாட்டாது


"குடி அரசு" நிருபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா. மானேஜர்,

"குடி அரசு"


"அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்திரப் பத்திரிகை
சந்தா தபாற்கூலி உள்பட 6 அணா
மாதிரிப்பிரதி இனாம்,
அறிவுவிளக்கம் ஆபீஸ்
உடுமலைப்பேட்டை.

அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி
மெடல் பெற்ற
விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

20 சாம்பின் பாக்கெட் ரூ. 2—0—0.
10 ,, ,, ரூ 1—4—0
காட்டுக் காய்கறி 20 ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்கார்சரி தோட்டம், சேலம்.

ஆரூடம்:—தர்ம ஞாயமான கேள்விகளுக்கு விடைகளெழுதி அனுப்ப ரூ. 1, பேர் கொண்டு கேள்வி 1-க்கு அணா 4. தபால் செலவு வேறு. இதற்கு முன்பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி. எஸ். அய்யர், சுப்பிரமண்ய உபாசி,
பழனி Palni P. O. (S. I.)

மூன்று மாதத்தில்
மோட்டார் ஓட்ட கற்றுக்
கொள்ளலாம்

1916ல் ஸ்தாபிக்கப்பட்டது. எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும. தேர்ச்சிபெற்ற மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மென்ட் லைசென்ஸ் ... கம்பெனி சர்டிபிகேட் ... கொடுக்கப்... 

மற்ற வி... எழுதி தெரிந்துகொள்ள...

ம... யா

மோட்டா[illegible] இன்ஜி[illegible] ஒர்க்ஸ்,
[illegible]ப்பூர்[illegible]ஸ்.



பழநி சி. எம. சாமி.

## குருதாம்பரபஸ்பம்

**சகல வியாதிகளுக்கும் கைகண்டது,**

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பித்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும்விலை ரூ. 25 ஏழைகளுக்குப்பாதிவிலை

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்று போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒண்ணரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A M. துரைசாமி, 80-நிர் மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

### சித்த ஆயுள்வேதவைத்திய ஆசிரியர்,

### C.மலையப்பசாமி.

நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S.I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை



## மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சித்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நானு திசைகளினின்றும்ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும் கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் கூலி வேறு.

விலாசம்:—மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்



### திரு நாயக்கர்.

வைக்கம் வீரர் உயர் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் அழகிய ஆப்டோன் படமமைந்த 1928 வருட காலண்டர் விலை அணா 2. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளபடியால் வேண்டுவோர் உடனே தலை அனுப்புக.

சிவஞானநிலையம், கோவிற்பட்டி



## "தமிழன்"

(ஓர் தமிழ் வாரப்பத்திரிகை.)

தாழ்த்தப்பட்டவர் சமத்துவம், சுதந்திரம், முன்னேற்றம்,

இவைகளை அடைய வேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்டவர்களும் "தமிழனை" வாங்கவேண்டும். தாழ்த்தப்பட்டவர்களாகும் ஆதிதிராவிடர்களின் குறைகளை இடைவிடாமல் கவர்ன்மெண்டாருக்கு விளக்கிக்கூறுவதும் இப்பத்திரிகையேயாகும்.

வருட சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் 3 வெளிநாட்டுக்கு ரூ. 4.

மானேஜர் "தமிழன்" ஆபீஸ், ஆண்டர்சன் பேட்டை, கே. ஜி. எப்.



## கதரன்பர்களுக்கு

### வேண்டுகோள்.

வரும் தீபாவளியன்று கதரணிவது சடங்கல்லவா, அன்றையதினம் முக்கியமாக கதர் பனியனுவது அணியவேண்டும். நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0
32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லாவிதமான கதர் ஜவுளிதினுசுகளும் கிடைக்கும் விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா.



## கணித சோதிடம்

பாசித் கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாகாமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி, முதலியார் பேட்டை, புதுச்சேரி


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது